
முரசொலி அண்ணா மலர்







ஆசிரியர்:

மு. கருணாநிதி



ஆயிர மலர் அணி வகுத்து
அழகுத் தோள் மீதும் தலைமீதும்
முற்றுகையிட்டாலும் - அண்ணை நின்
ஒளிசிந்தும்
விழி மலரை வெற்றி கொள்ளப் போமோ?


மு. க.



பூமடி

அறிவுமணங் கமழுகின்ற அண்ணன் தலைமீது
பொன்வைத்தால் நோகுமென்று
பூவாலே முடி வைத்தார்.
பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம் — அன்பு உள்ளம் —
அரவணைக்கும் அண்ணன் உள்ளம் — அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும் —
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்!
விழிமலர்கள் வேலாகும் — வாளாகும்
தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்!
கால்மலர்கள் வாடிடினும் — அவர்
கடும்பயணம் நிற்காது!
க்கமலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை-கழகத்தை!
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலைநாணச் செய்துவிடும்
மக்களாட்சி மலர் குலுங்க,
சமதர்மப் பூ மணக்க,
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக,
ஆடிவரும் தென்றல்
நாடிவரும் பூ முடியே! புகழ்முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே தினம்
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்...
உனைக்காக்க எனைத் துறப்பேன்.

முகநூல்நிதி



பினாங்கு மேயர் வாழ்த்து

The Mayor
City Hall
George Town
Penang.

By Airmail

9th September 1965.

Dear Sir,

Re: Special Number on 15th Sept.'65.

I thank you for your letter of the 1st instant, the contents of which are duly noted.

I certainly agree to the publishing of my message of greetings to your distinguished leader, in your special number to commemorate the 57th birthday of Thiru C. N. Annadurai, M.A., M.P.

With best greetings from Penang,

Yours faithfully,

C.Y.Choy

(C.Y.Choy)

அன்புள்ள ஐயா,

தங்களுடைய முதல் தேதியிட்ட கடிதத்திற்கு நன்றி. அதில் குறிக்கப்பட்டிருந்தவற்றைக் கவனித்-தேன். திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 57வது பிறந்த நாளை முன்னிட்டு தாங்கள் வெளியிடுகின்ற மலரில் தங்களின் மதிப்புமிகு தலைவருக்கு எனது வாழ்த்துகளை வெளியிட நான் ஒருப்படுகிறேன்.


பிறங்கிலிருந்து நல் வாழ்த்துகள்,

தங்கள் உண்மையுள்ள,

சி. ஒய். சாய்.



குடியரசு துணைத்தலைவரின் வாழ்த்து!



D.O. No. VP(11)1761.
उपराष्ट्रपति, भारत
नई देहली
VICE-PRESIDENT
INDIA
NEW DELHI
August 29, 1965.

Dear Sri Karunanithi,

I am glad to know that you are bringing out a special number of "Murasoli" on 15th September, 1965 to commemorate the 57th birthday of Shri C. N. Annadurai. I wish him many more, happy returns of the day and a long life in the service of the people.


ZAKIR HUSSAIN

அன்புள்ள திரு. கருணநிதி,

திரு. அண்ணதுரை அவர்களின் 57-வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் 1965 செப்டம்பர் 15-ம் நாள் முரசொலியின் சிறப்பிதழ் வெளிக்கொணர்வது அறிந்து நான் மகிழ்கிறேன்.


இந்த மகிழ்ச்சிகரமான நாட்கள் மென் மேலும் தொடர வேண்டும் என்றும் மக்கள் பணி புரிய அவருக்கு நீண்ட ஆயுள் ஏற்பட வேண்டு மென்றும் விழைகிறேன்.

ஜாகிர் உசைன்.



மாபெரும் தலைவர்!






அன்புள்ள நண்பருக்கு,

தி. மு. கழகத்தலைவர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் 57-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் வகையில் தங்கள் ஏடான முரசொலி சிறப்பு இதழ் வெளியிடுவது பற்றிய கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளிலிருந்தும், இல்லாமை, அறியாமையிலிருந்தும் சமுதாயம் விடுபட - சீர்திருத்தம் பெற இந்தப் பெரும் தலைவரின் மதிப்புமிக்க தொண்டு பயன்படும் என நான் நம்புகிறேன். நீண்ட பல்லாண்டுகள் அவருக்கு மகிழ்ச்சி வாழ்வு ஏற்படவும், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்ல தொண்டாற்ற வேண்டும் என்றும் விழைகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

எஸ். செல்லப்பாண்டியன்




60, BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS - 17


26-8-65

C. RAJAGOPALACHARI


அன்பான கடிதம் வந்தது. எழுத்தோவியங்கள் இப்போது ஸகுவாக ஓடவில்லை. இன்னது எழுதுவது என்று தோன்றவில்லை

அண்ணு அவர்களுக்கும் உங்களுக்கும் ஆசீர்வாதம்.





அறிஞர் வாழ்க!




பிரியமுள்ள ஐயா,

தங்கள் அன்புள்ள 20-8-65 கடிதம் கிடைத்தது.

முரசொலி, அறிஞர் அண்ணாதுரை அவர்களின் 57-வது பிறந்த தினத்தை முன்னிட்டு மலர் வெளியிடப் போவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நல்ல சமுகத் தொண்டரும், அரசியல் வாதியும் அறிஞருமான அண்ணாதுரை மேலும் பல்லாண்டு நல்வாழ்வு வாழவும் அன்னாரைப் பற்றி வெளியிடும் முரசொலியின் சிறப்பு மலர் மணமுடன் வெளிவரவும் என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.


தங்கள் அன்புள்ள
முத்தையா செட்டி



தமிழ்-தமிழாக வாழ வைத்தவர்!

தமிழ் இன எழுச்சிக்கு, தமிழ் மொழி உணர்ச்சிக்கு வழிகோலி எமக்கென்று ஒரு இனம் — ஒரு மொழி—ஒரு பண்பாடு—ஒரு வாழ்வியல் முறை உண்டென்று உலகிற்கு எடுத்துக் காட்டிய அறிஞர் அண்ணாவின் 57-வது பிறந்த நாளை ஒட்டி அவரை வாழ்த்துவதில் யானும் எனது தமிழ் அரசுக் கட்சியினரும் பெருமைப்படுகிறோம்.

தமிழ் இனத்திற்கு இன உணர்வை ஊட்டி திராவிடப் பெருங்குடி மக்களை ஒன்று படுத்திய அண்ணா-வேண்டாத காலத்திற் கொவ்வாத மூடப் பழக்க





இலங்கைப்பெரியார் செல்வநாயகம்

வழக்கங்களை முறியடித்து சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிமக்களை பகுத்தறிவு நெறியில் வாழ்வை நடாத்த வழி காட்டிய அண்ணை பாராட்டுதற் குரியவர்.

இந்தி, இந்தியத் துணைக் கண்டத்தின் பொது மொழியாவதையிட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் எதிர்ப் புணர்ச்சி யிருந்தும் அந்த எதிர்ப்புணர்ச்சிக்கு வடிவமும் உருவமும் கொடுத்து காரணங்கள் காட்டி நடை முறையில் இந்தியை எதிர்த்து வெற்றி கண்டு வருபவர் அண்ணை அவர்கள். அண்ணைவும் அன்னரின் திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ் நாட்டில் தோன்றியிராவிடின் தமிழ் தமிழாக, தமிழர் தமிழராக வாழ முடியுமோ என்பது பெரும் கேள்வி தான்.

அறிஞர் அண்ணை அவர்களின் பேச்சு, எழுத்து, சிந்தனை, செயல் தமிழ் இனத்தின் விழிப்புணர்ச்சிக்கு வழிவகுத்ததோடு அன்னவரின் புகழ் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து தென்னகம் எங்கும் பரவி இந்தியத் துணைக் கண்டத்தை தழுவி உலகில் எங்கெங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றார்களோ அவர்களின் உள்ளங்களில் எல்லாம் அன்னரின் பேர் நிலைத்து விட்டது. ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எமது நெருக்கடியான காலங்களில் எம் விடுதலை இயக்கத்திற்கு அண்ணை காட்டிய தார்மீக ஆதரவை யாம் என்றும் மறக்க முடியாது. அண்ணை புகழ் வாழ்க! அவர் அவர் பணி வெல்க வென வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

இதற்குப் பெயர் ஆற்றல்!

அறிஞர் அண்ணை அவர்களின் ஆற்றலில் மாற்றுரையும் கவர்வது அவரது சொல்லாற்றல் தான். எடுத்துக்கொண்ட தலைப்புக்கே சம்பந்தமில்லாமல் பேசுகின்ற பல பேச்சாளர்கள் உண்டு. ஆனால் அறிஞர் அண்ணை அவர்கள் எடுத்துக் கொண்ட தலைப்பைவிட்டுச் சிறிதும் பிறழாமல் கேட்பவர்கள் மலைத்துப்போகும் வண்ணம் பேசுவார்.

ஆற்றோரம்—என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரை புகழ்பெற்றது. அதேபோன்று 'பொருள்'—என்ற தலைப்பிலும் அவர் மிகச்சிறந்த உரை ஒன்று ஆற்றியிருக்கிறார்.

அண்மையில் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் அறிஞர் அண்ணை அவர்கள் கலந்துகொண்டார். அவர் பேசத் துவங்குவதற்கு முன் கல்லூரி மாணவர் தலைவரை அழைத்து 'நான் என்ன தலைப்பில் பேசுவது?' என்று கேட்டார். மாணவர் தலைவர் ''தலைப்பு இல்லை. விருப்பம்போல் பேசுங்கள்'' என்றார்.

பிறகு அறிஞர் அண்ணை அவர்கள் பேச எழுந்தார். ''நண்பர்களிடம் எனக்கு என்ன தலைப்பு கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். தலைப்பு இல்லை என்றார்கள். ஆகவே இன்றைய கூட்டத்தில் தலைப்பு இல்லை—என்ற தலைப்பிலேயே பேசுகிறேன்'' என்று கூறிவிட்டு 2 மணி நேரம் சிறப்புரை ஒன்று ஆற்றினார்.

டாக்டர் சத்தியவாணிமுத்து அவர் வெறும் மனிதரல்ல!



நம் அண்ணனுக்குப் பிறந்த நாள்! 57ம் ஆண்டு ஆரம்ப மாகிறது. அவரை சார்ந்திருக் கின்ற நம் இயக்கத்தார் மட்டு மின்றி தமிழ் மொழி பேசும் தமிழ் மக்கள் எங்கெங்குளரோ அங்கெல்லாம் செப்டம்பர் 15 சிறப்புமிக்க விழாநாளாகும். அவர் தமிழர்களுக்கு மாத்திர மல்ல அவரை சந்தித்த மக்கள் அனைவருக்குமே தலை சிறந்த வழிகாட்டி. மக்கள் சமுதாயத் திற்கோர் விடிவெள்ளி. அவர் பேச்சு பரவுமிடமெங்கும் புகழ் மணக்கும். அவர் எழுத்து திக்கெட்டும் முரசு கொட்டும். அவர் காட்டுகிற பாதை எதிரியையும் பிறகு பின்பற்றச் செய்யும். அவர் வெறும் மனிதரல்ல. ஆனால் அதைவிட மிக உயர்ந்தவர்.

அவரது பரந்த உள்ளமும் ஆழ்ந்த அறிவும் அவரது சொல் வன்மையும் செயல் வீரமும் கொண்ட இலட்சியவாதியாக்கி யுள்ளது. சிந்திக்க—செயல்பட நேரமும் எண்ணமுமில்லாது சமுதாயத்தின் சீர்கேட்டினால் சிக்கி சீரழிந்துவரும் ஒரு பகுதி யினரை—குறிப்பாக தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்து எழுச்சியுறச் செய்து தன்னைத் தானே ஈடுபடுத்திக்கொண்ட இணையற்ற மேதையாவர். அவரது எண்ணம் பரவும்; வெற்றி பெறும்.

சமீபத்தில் அவர் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். நாட்டு மக்கள் உள்ளத்தில் அழிக்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளார். அன்று திக் விஜயம் செய்த தென்னாட்டு அரசர்கள் காலத்தால் அழியும் கோட்டை கொத்தளங்களைக் கைப்பற்றி வந்தனர். ஆனால் நம் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களோ எண் ணற்ற மக்களது இதயங்களைக் கவர்ந்து வந்துள்ளார். அந்த அன்பு நிலைக்கும்; வளரும். மனிதகுல உரிமைக்காகவும் வாழ்வுக்காகவும் போராடும் மாவீரனது உருவம் எல்லோர் இதயக் கோவிலிலும் கொலு வீற்றிருக்கிறது.

தன்னைத்தானே வருத்திக் கொண்டு மக்களது துயர் துடைப்பதில் ஏசுவாகவும், மாற்றுரை செயலால் மட்டு மின்றி சொல்லாலும் புண் படுத்தாத அகிம்சாமூர்த்தி புத்தராகவும் எளியோர்பக்கம் நின்று வலியோர் கொட் டத்தை வீழ்த்தும் நபிகள் நாயகமாகவும்நமது அண்ணன் புகழ் நாளும் நாளும் வளரு கிறது. அவர் ஒரு குறிப்பிட்ட நாட்டின் குறிப்பிட்ட மக்க ளது அரசியல் கட்சித்தலைவர் மாத்திரமல்ல. வாழத் துடிக் கும் வலிவற்றோருக்கு இயற்கை அன்னை அளித்துள்ள வரப்பிர சாதம்; மாபெரும் வழிகாட்டி.

இன்று நாம் கொண்டாடும் அவரது பிறந்த நாள் வருங் காலத்தில் உலகமக்கள் கொண் டாட வேண்டுமென்பது என் ஆசை.

அவர் வெறும் மனிதரல்ல. சற்று அப்பாற்பட்டவர். அது தான் தெய்வத் தன்மையோ – எனக்கு எழுதத் தெரியவில்லை.

வெற்றி தேடித் தந்தவர்



அரசியலிலே கொள்கை வேறுபாடுடைய இரு வேறு கட்சிகளின் தலைவர்களிடையே கருத்து வேறுபாடும் தோன்றுவது இயற்கை; எதிர்பார்க்க வேண்டியதுமாகும். ஆனால், கருத்து வேறுபாடுகளுக்கிடையேயும் நண்பர்களாக—ஆம்; உண்மை நண்பர்களாக—இருக்க முடியுமானால், அது மிகமிக உயர்ந்த நாகரீகமாகும். அந்த நாகரீகத்தின் படி எத்தனையோ வேறுபாடுகளுக்கிடையேயும் நானும் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களும் நண்பர்களாக இருந்து வருகின்றோம். இன்று நேற்றல்ல; முப்பது ஆண்டுகளாக!

அன்பர் அண்ணாதுரையை நான் முதன்முதலில் சந்தித்தது, 1934-ல். அப்போது, நான் கள்ளிறக்கும் தொழிலாளர் நலன்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தேன். வடநாட்டவரான இத்தாலியா என்ற பார்ஸி வணிகர் ஒருவர், சென்னை நகரிலுள்ள அத்தனை கள்ளுக்கடைகளையும் மொத்தமாக குத்தகை எடுக்க முன்வந்தார். இங்கு அப்போதிருந்த சென்னை அரசாங்கம்—குறிப்பாக, நீதிக்கட்சி ஆட்சி, அந்த வடநாட்டவருக்கு ஆதரவாக இருந்தது. இத்தாலியாவிடம் சென்னை கள்ளுக்கடைகள் போய்விடுமானால், அவர் வெளியூர்களிலிருந்து கள்ளைக் கொண்டுவந்து, சென்னையிலுள்ள கள் தொழிலாளர்களை வேலையில்லாத் திண்டாட்டத்தில் ஆழ்த்திவிடுவார் என்ற அச்சம் ஏற்பட்டது. அது ஒரு புறமிருக்க, வடஇந்தியர் ஒருவர் பெரும்பாலும் தமிழர்கள் ஈடுபட்டுள்ள வாணிபத்தைக் கைப்பற்றிக்கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை. அப்போது நான் கட்சி வெறி பிடித்த காங்கிரஸ்காரனையினும், தமிழர்களின் தனிநலன்களைக் காப்பதிலும் அக்கறை கொண்டவனாக இருந்தேன். அதனால், வடநாட்டு பார்ஸி வணிகருக்கு எதிராக சென்னை நகர கள் வணிகர்கள் - தொழிலாளர்கள் ஆகியோரைத் திரட்டி, பெருங்கிளர்ச்சி நடத்தினேன். அப்போது கிராமணி குல மகாஜன சங்கத்தின் செயலாளனாகவும் நான் இருந்ததால், கள் தொழிலாளர்களும் வணிகர்களுமாக இருந்த தமிழர்களைத் திரட்டுவது எனக்கு எளிதாக இருந்தது. அந்தச் சமயத்தில், முன்னாள் மேயர் காலஞ்சென்ற சி. பாஸுதேவ், இன்று பம்பாய் கவர்னராக இருக்கும் டாக்டர் பி. வி. செரியன் அவர்களின் மைத்துனர் திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் பி. ஏ. ஆகியோருடன் சேர்ந்து, தொழிற்சங்க இயக்கத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் நண்பர் அண்ணாத்துரை.

அதனால், யான் மேற்கொண்ட கிளர்ச்சிக்கு அன்பர் அண்ணாத்துரையின் உதவியை நாடினேன். நண்பர் ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்கள் துணை கொண்டு, சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்க அலுவலகத்தில் ஒருமுறையும், அப்போது நீதிக்கட்சியின் நாளிதழாக வெளிவந்து கொண்டிருந்த "திராவிடன்" அலுவலகத்தில் ஒரு முறையும் திரு. அண்ணாத்துரையைச் சந்தித்துப் பேசினேன். முழுக்க முழுக்க தமிழரே நடத்திவரும் ஒரு வாணிபத்தில், வடவர் ஆதிக்கம் பெறுவதை அப்போது நீதிக்கட்சியின் இளந்தலைவராக இருந்த திரு. அண்ணாத்துரையும் வெறுப்பது இயற்கைதானே! நான் கூட்டிய ஒன்றிரு பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு அவர் பேசியதோடு வேறுவகைகளிலும் ஆலோசனைகள் கூறி எனக்குப் பேருதவி புரிந்தார். ஒருவகையில், அவர் சார்ந்திருந்த நீதிக்கட்சியின் ஆட்சிக்கு எதி

ராகவும்—தொழிற்சங்க இயக்கத் தலைவர் என்ற முறையில்—எனக்கு ஆதரவளித்தார் என்றும் சொல்லலாம். எங்கள் கூட்டு முயற்சியில் நாங்கள் வெற்றி பெற்றோம். ஆம்; தமிழ் நாட்டிற்குரியதோர் வாணிபத்தில் வடநாட்டு இதாலியா ஆதிக்கம் பெறுவது அடியோடு தவிர்க்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகும் ஜேசுதாசன் வீட்டிலும், சென்னை துறைமுக தொழிலாளர் சங்க அலுவலகத்திலும் நாங்களிருவரும் ஒன்றிரு முறை சந்தித்திருக்கிறோம். ஆனால், 1936-க்குப் பின்னர், காங்கிரசுக்கும் நீதிக்கட்சிக்கு மிடையே கடுமையான போராட்டம் நடைபெற்றதால், எங்களுடைய ஆரம்ப நட்பு அதற்குமேல் வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

1946-ல் நான் "தமிழ் முரசு" மாதஏட்டைத் துவக்கி அதில், "சுதந்திர இந்தியாவில் சோஷலிச தமிழ்க் குடியரசு" கோரிக்கையை வலியுறுத்தி எழுதியபோது, தமது "திராவிட நாடு" வார இதழில், என் கருத்தை வரவேற்று, என்னை உற்சாகப் படுத்தும் வகையில் அடிக்கடி எழுதி வந்தார் திரு. அண்ணாத்துரை. அதற்காக, பெரியார் ஈ. வே. ராவின் கடுமையான கண்டனத்துக்கும் அவர் உள்ளானதை நான் அறிவேன். இடைவிட்டுப்போன எங்கள் பழைய நட்பு இந்த சந்தர்ப்பத்தில் திரும்பவும் அண்ணாத்துரையாலேயே புதுப்பிக்கப் பெற்றது.

பின்னர், 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் வெள்ளையர் வெளியேறி, பாரதம் விடுதலை பெற்றபோது, அந்த நன்னாளைக் கொண்டாடுவதற்கு எதிர்ப்புக் காட்டினார் தி. க. வின் பெருந்தலைவர். அது எனக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தந்தது. பெரியாரிடம் அப்போதும் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. விடுதலைப் போராட்ட காலத்தில், சந்தர்ப்ப சூழ்நிலையால் காங்கிரசுக்கும் தி. க. வுக்கும் ஏற்பட்ட பகைமை, விடுதலைக்குப் பிறகேனும் மறையவேண்டும்; தமிழினத்தின் உரிமைக் கிளர்ச்சியில், இனவுணர்ச்சி யுடைய காங்கிரஸ்காரர்களும் தி. க. வினரும் ஒன்றுபட வேண்டும் என்ற எண்ணம் அப்போது எனக்கிருந்தது. அதனால், எனது "தமிழ் முரசு" (1947 ஆகஸ்ட்) இதழில், "ஆகஸ்டுப் பதினைந்து" என்னும் தலைப்பில், ஒரு தலையங்கம் எழுதினேன். அதில், சுதந்திர நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுவதைக் கைவிடுமாறு, தி. க. வினருக்கு குறிப்பாக, அதன் பெருந்தலைவர் ஈ. வே. ராவுக்கு அன்பு முறையில் வேண்டுகோள் விடுத்தேன். அன்றைய காங்கிரஸ், மகாவைதீகம். "வைதீகம்" என்றால், ஒரு காங்கிரஸ்காரன் தி. க. வினருடன் தனிப்பட்ட முறையில் பழகினாலும், அவனுடைய தேசபக்தியையே சந்தேகிக்கும் வெறிப்போக்கு! அத்தகைய பயங்கர சூழ்நிலையில், "தமிழர்" என்ற இனவுணர்ச்சி கொண்டு, ஒன்றுபடக் கோரி தி. க. வினருக்கு வெளிப்படையாக வேண்டுகோள் விடுத்தேன். ஆகஸ்டுப் பதினைந்தை அவர்களும் கொண்டாட வேண்டும் என்று கூட ஆலோசனை கூறினேன்.

என் வேண்டுகோளை எதிரொலிக்கும் வகையில், "இன்பத் திருநாள்" என்னுந் தலைப்பில் தமது "திராவிட நாட்"டில் தலையங்கம் எழுதினார் திரு. சி. என். அண்ணாத்துரை. அதில், பாரதம் சுதந்திரம் பெற்றதை வரவேற்று, சுதந்திர நாள் துக்கநாள் ஆகாதென்றும் வாதித்து, அந்த நன்னாளைக் கொண்டாடும் கடமை தி. க. வினருக்கும் உண்டென்று வலியுறுத்தினார்.

சுதந்திர நாளைக் கொண்டாடுமாறு தி. க. வினருக்கு அன்புணர்ச்சியோடு வேண்டுகோள் விடுத்ததற்காக காங்கிரஸ் வட்டாரத்திலே நான் கடுமையாக வெறுக்கப்பட்டேன். அதுபோல, "துக்க நாள்" கூடாதென்று கூறியதற்காக, தி. க. வட்டாரத்தில் திரு. அண்ணாத்துரை பயங்கரமான எதிர்ப்புக்கு இரையானார். இதனாலும் எங்கள் நட்பு வலுப்பெற்றதெனலாம்.

திரு. அண்ணாத்துரைக்கும் எனக்குமுள்ள நட்பை வலுப்படுத்தியவர்களிலே, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் முக்கியமானவராவார். அவர் எங்களை அடிக்கடி சந்திக்க வைப்பதை ஒரு கடமையாகக் கருதினார். தம் வீட்டில் எந்த ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தாலும் எங்களிருவரையும் அழைக்கத்

சிலம்புச்செல்வர் ம.பொ.சி

தவறமாட்டார். எங்களோடு, நண்பர் ப. ஜீவானந்தம் அவர்களையும் அழைத்து, மூவரையும் ஒருசேர வைத்து மகிழ்வார்.

இப்படி, எத்தனை எத்தனையோ சோதனைகள், கருத்துப் போராட்டங்களுக்கிடையேயும் நானும் திரு. அண்ணாத்துரையும் எங்கள் நட்பைக் காப்பாற்றி வந்திருக்கிறோம். ஒருக்கால் "சுடுமூஞ்சித்தனம்" என்னிடம் இருந்திருக்கலாம். அவரிடத்து நான் கண்டதில்லை. அதற்காகவும் அவரை நான் வாழ்த்தலாம்.

எங்கள் நட்பு, முப்பதாண்டுக்கும் மேற்பட்ட பழமையை உடையது என்பதை எங்களைப் பின்பற்றும் இருவேறு முகாமினருக்கும் உணர்த்தும் பொருட்டே, பழைய கால செய்திகளைக் கூறினேன்.

அவருக்கு 57-வது வயது ஆரம்பமாகும் நன்னாளில், ஒரு நூற்றாண்டுக்கு மேலும் அவர் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

எதிர்க்கட்சிக்குரிய இடத்தைப் பிடிப்பதிலே, தமிழகத்திலுள்ள பார்லிமெண்டரி அரசியல் கட்சிகளிடையே கடந்த பதினெட்டு ஆண்டுகளாகக் கடுமையான போட்டி நடந்திருக்கிறது. அதில், தனது கட்சிக்கு வெற்றி தேடித்தந்து விட்டார் திரு. சி. என். அண்ணாத்துரை. ஆகவே, பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக விளங்கும் அவரை வாழ்த்துவது ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அரசியல் வாதிகளின் கடமையாகிறது. அந்தக் கடமையுணர்ச்சியோடும் என் அரிய நண்பர் அண்ணாத்துரையை மனமார வாழ்த்துகின்றேன்.

மோதிரம்—3


கழகத்தைவிட்டுச் சென்று காங்கிரசில் சேர்ந்துள்ள முன்னாள் தலைவரின் திருமணம் நடைபெற்றபோது பெரியார் புரட்சிகரமான சொற்பொழிவு ஆற்றினார். பெண்களை வெறும் அலங்காரப் பொம்மைகளாக வைத்திருக்கக் கூடாது என்றும், நகைப் பைத்தியம் கூடாது என்றும் பேசினார் பெரியார். அவர் அவ்விதம் புரட்சி முழக்கமிட்டுக் கொண்டிருக்கும்போது, மாப்பிள்ளையாய் உட்கார்ந்திருந்தவர் பெரியார் அணிந்திருந்த விலையுயர்ந்த மோதிரத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாராம். இதை அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார்.

★

ஒருநடிகை அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய சந்திரமோகன் நாடகத்தைப் பார்த்தார் ஒரு நடிகர். எதையும் பிறருக்கு மனமுவந்து தரும் பழக்கமில்லாத அந்த நடிகர் அருமையான நாடகம் கண்டு மனம் உருகி விட்டார். மேடையில் ஏறி, தான் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி அறிஞர் அண்ணா அவர்களுக்கு அணிவிக்க முயன்றார். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள், "மோதிரம் அணியும் பழக்கம் எனக்கு இல்லை" என்று கூறி, அந்த நடிகரின் நடிப்புத் திறமையைப் புகழ்ந்துவிட்டு அவருக்கே அந்த மோதிரத்தை அணிவித்தார், அண்ணா அவர்கள்!

★

அறிஞர் அண்ணா அவர்கள் மாநகராட்சித் தேர்தலில் முதன் முதலாக கழகம் பெரும்பான்மை பெற்றபோது தோழர் மு. கருணாநிதிக்கு ஒரு மோதிரம் பரிசளித்தார். அந்த நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியபோது "நான் இதுநாள்வரை என் மனைவிக்குக்கூட ஒரு மோதிரம் வாங்கித் தந்ததில்லை. ஆனால் தம்பி கருணாநிதிக்கு நானே கடைக்குச் சென்று மோதிரம் வாங்கவேண்டி வந்தது. போயும்—போயும்—தேர்தலைப்பற்றி கருணாநிதியிடம் பந்தயம் வைத்தேனே. அதனால்தான் இந்த நிலை எனக்கு ஏற்பட்டது"—என்று பலத்த சிரிப்புக்கிடையே குறிப்பிட்டார்.



அண்ணனே! உங்களுடைய பிறந்த நாளில் நான் உங்களது திருமுகத்தைப் பார்த்து—உங்களது காலடியைத் தொட்டு வணங்கத் துணியவில்லை.

தங்கள் காலடிபட்ட மண்ணைத் தொட்டு வணங்குகிறேன்.

தங்களுக்குப் புகழ் ஒளி தரும் ஆயிரம் விளக்குகளிடையே எனது அகல் விளக்கையும் ஏற்றிவைக்கிறேன். தங்களுக்குத் தரப்படும் அமுதப் பொற் கலசங்களுக்கிடையே எனது எளிமையான கஞ்சிக் கலயத்தையும் நீட்டுகிறேன்.

உங்களுடைய பிறந்த நாள் எங்களுக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. ஆனால் எங்களுடைய பிறந்த நாள்எங்களுக்கு நினைவில்லை. இதற்குரிய காரணம் எங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

காந்தி பிறந்தநாள் சர்க்கா (ராட்டை) தினம்! நேரு பிறந்தநாள் குழந்தைகள் தினம்! குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் ஆசிரியர் தினம்.

ஆனால், அண்ணனே! நீங்கள் பிறந்தநாள் ஏழை எளியவர்களாகிய எங்களுடைய தினம்! ஆம்; அண்ணன் பிறந்த நாள் ஏழைகள் தினம்.

எங்களுடைய குறைகளை எங்களது நாளில் நாங்கள் சொல்லித்தான் தீரவேண்டும். இன்னும் நாங்கள் கிழிந்த பாயில் கிடக்கிறோம் இன்னும் எங்கள் பெண்கள் ஓட்டுப் போட்ட ஒரே ஒரு சேலையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் எங்கள் குழந்தைகள் நிர்வாணமாகவே நின்று அழுதுகொண்டிருக்கின்றன. படிக்கவேண்டிய வயதில் அழுக்கேறிய துண்டைக் கட்டிக்கொண்டு மாடுகளின் பின்னாலே எங்கள் சிறுவர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். சீவிச் சிங்காரித்து அழகு பார்க்கவேண்டிய வயதில் எங்கள் வீட்டுச் சிறுமிகள் தலையில் கூடையைச் சுமந்துகொண்டு மாட்டுச் சாணத்தை எடுத்துக்கொண்டு திரிகிறார்கள். ஏழ்மையான நிலையிலும்—கடுமையான உழைப்பை விதைக்கிறோம்; ஆனால் துயரத்தையே அறுவடை செய்து கொண்டிருக்கிறோம்.

துயரம் பத்துத் திசையிலும் ஆழ்ந்திருந்தாலும் நாங்களும் மகிழ்கிறோம்; சிரிக்கிறோம்; ஆம்; ஏழைகள் சிரிக்கிறார்கள் உங்கள் முகம் காணும்போது! ஏழைகள் மகிழ்கிறார்கள், நீங்கள் பேசும்போது! ஏழைகள் ஆர்ப்பரிக்கிறார்கள், நீங்கள் உலா வரும்போது!

அண்ணா வாழ்க!—என மகிழ்ச்சியால் அவர்கள் வாழ்த்துகிறார்கள் என்றால், உங்களால் தங்களுடைய துயரம் நீங்கும் என்பதால் வாழ்த்துகிறார்கள்.

ஏழை அல்லல்படும்போது அழும் கண்ணீர்—செல்வத்தை அறுக்கும் படைஎன்பது எப்படி உண்மையோ—அது போல்—

ஏழை நம்பிக்கையோடு கூவும் வாழ்த்துக்கள்—செல்வத்தை அளிக்கும் கொடை என்பதும் உண்மை.

ஏழைகள் தரும் புகழ் செல்வத்தை ஏராளமாகப் பெற்றிருக்கிறார் எங்கள்

அடியார்

அண்ணன்! அவர்கள் தந்த செல்வத்திற்குப் பதிலாக செல்வம் கொழிக்கும் வாழ்வை அவர்களுக்கு திருப்பித் தர ஓயாது அவர் பாடுபடுகிறார்.

இதை உணர்ந்த காரணத்தால்தான் அண்ணன் முகம் காண அழுக்குச் சட்டைகளும், வியர்வை மேனியரும் வந்து கூடுகிறார்கள்.

அவர்—ஏழைகளுக்கு அண்ணன் மட்டுமல்ல.

அவர்களது உடலின் இருதயமாய் இருக்கிறார்! கண்களுக்குக் காட்சியாய் இருக்கிறார்: காதுகளுக்குக் கீதமாய் இருக்கிறார்; கை—கால்களின் சக்தியாய் இருக்கிறார். சுருக்கமாக அவர்களின் கனவுகளை நிஜமாக்கும் தேவதையாய் நிற்கிறார்.

இன்னும் ஒரு மெய்யான செய்தியைச் சொல்லியாக வேண்டும். வசதி படைத்தவர்கள் அடிக்கடி கூறுகிற 'மனச்சாட்சி' எங்களுக்கென்று தனியாக இல்லை!

மனச்சாட்சி என்பது ஒரு செயல் தவறு; சரியா எனக் கூறும் உண்மையின் சாட்சியம்.

தனி மனிதர்கள் தங்கள் மனச்சாட்சியை நம்புகிறார்கள். நாங்களோ எங்களின் அண்ணனை நம்புகிறோம்.

எங்களின் மனச்சாட்சியே எங்கள் அண்ணன்தான்.

ஏனெனில், எங்களது மனதைவிட—அவர் மனது பெரிது; எங்களது மனத்தின் சாட்சியத்தை நாங்கள் வெளியிடுவதை — வலிமையுடன் அவர் வெளியிடுகிறார்.

எங்களது மனமாய் அவர் விளங்குகிறார்; எங்களது சாட்சியமாய் அவர் பேசுகிறார்!

எனவே, எங்களது மனச்சாட்சி—எங்கள் அண்ணனே! எங்களுக்கென்று தனியான மனமும் இல்லை—சாட்சியமும் இல்லை! எல்லாம் அவரே!

'எல்லா'மாய் விளங்குகின்றவரின் பெயர் என்றென்றும் இதயக் கொலுவிலும் வாயிதழ் வாசலிலும் குடியிருக்கும்.

பொழுதெல்லாம் கன்னியரின் முத்தத்தை விரும்புகின்ற காளையர்கூட, சாவுக் கன்னியின் முத்தத்தை வெறுத்து ஒடுவார்கள். ஆனால் பாவம்—அவர்களுக்குத் தெரியாது. அந்தக் கன்னிகையின் கைகள் எப்போதும் எல்லாரையும் அணைத்தபடியேயிருக்கிறது.

அந்தக் கன்னிகை சிலரை திடீரென முத்தமிடுவாள்; சிலரை மெல்ல மெல்ல முத்தமிட்டு வாழ்வை முடிப்பாள்.

எங்களை அவள் என்றோ ஒரு நாள் முத்தமிட முனைவாள்; ஆனால் அப்போது அவளால் எளிதில் முத்தமிட முடியாது. எங்கள் உதடுகளுடன் எளிதில் அவள் உதட்டைச் சேர்த்துவிட முடியாது.

ஏனெனில், அந்த மரணப் படுக்கையிலும் எங்கள் உதடுகள் ஓயாது கூவிக் கொண்டே இருக்கும்; கால் விரைத்து—கண்கள் சொருகி இதயம் உறைந்து போகிற அந்த நேரத்திலும் நாங்கள் முழங்கும் கடைசி முழக்கம் என்ன? அது இதுதான்:

அண்ணா வாழ்க! வாழ்க! வாழ்க!

பெரும்பயணம்

கழகத்திலிருந்து பிரிந்து ஓடிய ஒருவர் தமிழில் தனக்கு நிகர் யாருமில்லை—என்ற இறுமாப்பு கொண்டிருப்பவர். அவர் ஒருதடவை தமது பத்திரிகையில் தி. மு. கழக வரலாறுபற்றி கவிதை எழுதியிருந்தார். அதற்கு பெரும் பயணம் என்ற தலைப்பு தந்திருந்தார். அந்தத் தலைப்பைப் பார்த்தார் அண்ணா. உடனே அந்தத் 'தலைகனத்தவருக்கு' சொல்லி அனுப்பினார். ''பெரும்பயணம் என்பது சாவுபற்றிக் குறிப்பிடுவதற்குத்தான் பயன்படுத்துவார்கள்'' என்று அண்ணா கூறினார். தமிழில் தன்னைவிட அறிந்தவர் ஒருவர் இருக்கிறார்—என்பதை அறிந்து தலைகனத்தவரின் தலை அவமானத்தால் தொங்கியது.




பொற்கதவுகள் திறக்கட்டும்*

எஸ்.எஸ்.மாரிசாமி எம்.பி.

முதல் உலகப் போர் நடந்து வந்த காலம். 1964ல் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் பெரும் பரபரப்பு. வடக்கேயிருந்து தெற்கிலும், தெற்கேயிருந்து வடக்கிலும் இரும்புத் தொப்பிகள் அணிந்த பிரிட்டிஷ் படையினர் அணிவகுத்து நடக்கிறார்கள். வீதிகளில் பெண்களோ நடமாட முடியவில்லை. அடுத்து ஏதோ நடக்கப்போவதாக ஓர் உணர்வு. அந்த நேரத்தில்.....

ஒரு ரொட்டிக் கடை உள்ளே, பெரிய அடுப்புகளுக்கு, அருகில் பல சிறுவர்கள் அமர்ந்து சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் நடுத்தர வயதுடைய ஒருவர் அமர்ந்து ரொட்டி மாவு பிசைந்து கொண்டிருக்கிறார். அருகே உள்ள அந்தச் சிறுவர்கள் அவரை குறு குறுவென்று பார்க்கிறார்கள். இவர் யார்? புது ஆளாக—இருக்கிறாரே? உண்மையிலேயே ஒரு தொழிலாளிதானா அல்லது அப்படி வேஷம் போடுகிறாரா? என்பன போன்ற கேள்விகள்.

மாவு பிசையும் அந்தப் பெரியவர் சிறிது நேரத்தில் கைகளைத் துடைத்துக் கொண்டு எழுகிறார். அவரைத்தேடி வரும் அந்த ஆளிடம் ஏதோ குசு குசுவெனப் பேசுகிறார். சிறிது நேரத்தில் வந்த ஆள் இவரிடம் ஒரு சிறு மூட்டையைத் தந்து விட்டுப் போகிறான். அந்த மூட்டையுடன் அவர் ஒரு ஜன்னலருகே அமர்ந்து கொள்ளுகிறார். கண் மூடிக் கண் திறப்பதற்குள் தெருக் கோடியில் வெடிச் சப்தம் கேட்கிறது. காதைச் செவிடாக்கும் பேரிரைச்சல். அடுத்து மடமடவெனச் சுடும் துப்பாக்கி ஓசை. சிறுவர்கள் பயந்து போய் தெருவுக்கு ஓட எழுகிறார்கள். ஆனால், ரொட்டிக் கடையின் கதவுகள் மூடப்படுகின்றன. அந்த மர்ம ஆள் "யாரும் நகராதீர்கள்; வெளியே எதிரிகள் சூழ்ந்து விட்டார்கள். நீங்கள் கதவைத் திறந்தால் நாம் அனைவரும் எதிரிகையால் கொல்லப்படுவோம். அப்படியே இருந்தால் நமக்கு உதவி வரும். வெற்றி பிறகு நமக்குதான்" என்கிறார். பேச்சோடு அவர் நில்லாது, கையிலிருக்கும் மூட்டையிலிருந்து ஒவ்வொரு வெடி குண்டாக எடுத்து ஜன்னல் வழியே வீசுகிறார். அப்போதுதான்



*

அந்த சிறுவர்களுக்கு அவர் தேசீயத் தோழர் என்றும் விடுதலைக்காகப் புரட்சி நடக்கிறது என்றும் தெரிகிறது.

ரொட்டிக் கடை தகர்க்கப் படுகிறது. கதவுகளைத் துப்பாக்கிசனியன்களால்குத்தித் துளைக்கும் பிரிட்டிஷ் துருப்புகள்—உள்ளே வந்து விடுகிறார்கள். ஆனல் அந்த மர்ம மனிதன் கையில் விலங்குப் பூட்டப்படுகிறது. அடுத்த வினடி, அவரை இழுத்துச் சிறிது நேரத்தில்... செல்லுகிறார்கள். ஊரில் பயங்கர அமைதி நிலவுகிறது. உயிரற்றுக் கிடக்கும் ஊரில் ஊரடங்குச் சட்டத்தை வேறு பிறப்பிக்கிறார்கள்.

மூன்றும் நாளன்று விசாரணை. அந்த மர்மப் பேர் வழிக்குத் தூக்கு தண்டனை என்கிறார்கள். தேசமே இதைக் கேட்டு திடுக்கிடுகிறது. ஆனல் அந்த வீரனே கடைசிச் செய்தி என்று அறிக்கை விடுகிறான்.

"தோழர்களே, வீரர்களே! புரட்சி என்று எழுந்தோம். நமக்குத் தோல்வி கிட்டி விட்டது. வெற்றி தேவனே ஏழைகளை நினைக்கமாட்டான் போலும். எனினும் தைரியத்தை இழக்காதீர்கள். நேரம் வரும்; காலம் மாறியே தீரும். அது வரை நீங்கள் ஓய்வு பெறுங்கள். ஒரு சண்டை, சச்சரவு கூட இருக்கக் கூடாது. நம் தேசீய இயக்கம் செத்து விட்டதோ என்று கூட எதிரிகள் நினைக்கலாம். கை கொட்டிச் சிரிக்கலாம். சிரிக்கிறவர்கள் சிரிக்கட்டும். ஆனல் ரோஷப்பட்டு எதுவும் செய்யாதீர்கள். சிறிது காலம் நாம் அமைதியுடன் இருந்தால்தான் நமது லட்சியம் ஈடேறும். நாம் மிகச் சாதாரண மானவர்கள். எதிரிகளோ பராக்கிரமம் படைத்தவர்கள். பண பலமும் படை பலமும் அவர்களுக்குத் துணை....."

பிரிட்டனையே கதிகலங்கச் செய்தது அந்தப் புரட்சி. அதற்கு சரித்திரத்தில் ஈஸ்டர் புரட்சி என்பார்கள். அந்த புரட்சிக்குத் தந்தை தான் நாம் கூறிய அந்த மர்ம ஆள். தூக்கு தண்டனை பெற்றவர்! பெயர் (Emon Devalara) ஈமன் டிவெலரா இன்று அயர்லாந்தின் ஜனுதிபதி. 1932-ம் ஆண்டிலிருந்து பிரதமராகவோ ஜனுதிபதியாகவோ தொடர்ந்து பதவி வகித்து வருகிறார்.

இவருக்கு தூக்கு தண்டனை விதித்த பிரிட்டன், அந்த தண்டனையை நிறை வேற்ற முடியவில்லை. காரணம், உலகத்தில் அத்தகைய ஆத்திரமும், கோபமும் எழுந்தது இந்த தண்டனையைக் கேட்டு. அப்படி உலக மக்கள் அன்பைக் கவர்ந்தவர் டிவெலரா! எனினும் அவர் பேசும் பொழுதெல்லாம் தன்னையும் தன் கட்சியினரையும் "மிகச் சாதாரண மானவர்கள்" என்றுதான் அழைப்பார்.

அபிரகாம் லிங்கன் மிக எளிய நிலையிலிருந்து அமெரிக்கச் சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றவர். கறுப்பு நிற நீக்ரோ மக்களுக்கு இன்றும் அவர் தந்தை. நல்ல உள்ளம் படைத்த வெள்ளையர்கள் கூட அவர் சிலைக்கு முன்னுல் வந்து அஞ்சலி செய்யும் போது இரண்டு சொட்டுக் கண்ணீராவது விடுவார்கள். அத்தகைய அபிரகாம் லிங்கன்தான் அமெரிக்க ஜனுதிபதி ஆனர். இவருக்கும் இவரோடு போட்டி போட்ட டக்ளாஸ் என்பாருக்கும் போட்டி. டக்ளாஸ் தான் படித்தவர் பணக்காரர், செல்வாக்கு மிகுந்தவர் என்ற மமதையில் பேசுவார். லிங்கனே தாம் எளிய குடும்பத்தில் பிறந்தவர், நாட்டுக்குத் தொண்டாற்ற விரும்பும் மிகச் சாதாரண மானவர் என்று பேசுவார். லிங்கனின் அடக்கம் மக்களைக் கவர்ந்தது. அவர் எதிரிகளோ அவர் எளிமையைக்கண்டு எள்ளி நகையாடுவார்கள். ஆனல் இறுதியில் லிங்கனுக்கு வெற்றி.

அடிமை விலங்கை தகர்த்தெறிய லிங்கன் நடத்திய போராட்டம் ஏராளம். தென்னமெரிக்கர்களுக்கும் வட அமெரிக்கர்களுக்கு மிடையே ஆயுதப் போர் நடந்தது. பலத்த சேதத்துக்கிடையே எதிரிகள் சரண் அடைந்தார்கள். வெற்றி கண்ட லிங்கனைப் பாராட்ட அமெரிக்காவே திரண்டு வந்தது. அந்த நிலையிலும் லிங்கன் "வெற்றி எனக்கா? யார் சொன்னது? உண்மை வென்றது. மிகச் சாதாரண மானவர்களாகிய நாம் இவ்வளவு பெரிய காரியத்தை எப்படிச் செய்ய முடியும்? காரியம் உண்மையானது என்பதால் அது வென்றது" என்றார்.

அரைக் குவளைகள் கால் குவளைகள் காலத்தில் அண்ணு அவர்களின் கம்பீரம் மிகுந்த குரல் கேட்கிறது. அதில் காணும் பண்பும் அடக்கமும் உண்மையிலேயே பெருமைப் படத்தக்கவை.

சரித்திரத்தின் தலைவாயிலில் அண்ணு அவர்கள் நிற்கிறார்கள். அவர்களுக்கு 57வது பிறந்தநாள் இன்று. இந்த நாள் எதிர்காலத்தில் பொற் கதவுகளைத் திறக்குமாக! தமிழகம் தலை நிமிர்ந்து நிற்க அப்பொற் காலம் மிக மிக தேவை என்பதை விளக்கவா வேண்டும்? *



அண்ணே!

''திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள், மாலை நேரக் கல்லூரிகளாக விளங்குகின்றன'' - என்று காரைக்கால் வட்டத்தைச் சார்ந்த, 'சேற்றூர்', என்ற சிற்றூரிலே இருபதாயிரத் திற்கு மேற்பட்ட பொது மக்கள் குழுமியிருந்த ஒரு பொதுக் கூட்டத்தில், அறிஞர் அண்ணு அவர்கள், அண்மையில் பேசும்போது குறிப்பிட்டார். அது முற்ற முற்ற உண்மை.


அறிஞர் அண்ணு அவர்களை ஆசிரியராகக்கொண்டு, காஞ்சியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த ''திராவிட நாடு'' ஒரு பல்கலைக் கழகமாக விளங்கிற்று என்று குறிப்பிடலாம். ஒவ்வொரு வாரமும் அந்தப் பல்கலைக் கழகப் பாடங்களைக் கற்று ஏற்றம் பெற்ற மாணவர் களின் பெயர்ப் பட்டியலிலே, நாவலரும் உண்டு; கலைஞ ரும் உண்டு; பேராசிரியரும் உண்டு; நானும் உண்டு என்னைப் போல எண்ணற் றோரும் உளர்!

எங்களூரிலே (காரைக் காலில்) ஒரு மிட்டாய்க் கடைக்காரர் இருந்தார். வாரந்தவருமல் ஞாயிற்றுக் கிழமை காலையில் மிட்டாய்க் கடைக்குச் செல்வதுண்டு; மிட்டாய் வாங்க அல்ல; அதைவிட சுவை தரும், 'திராவிட நாடு' இதழ் சுவைக்க! ஏனெனில் அந்தக் கடையில்தான் திராவிட நாடு கிடைக்கும்.

அண்ணுவின் எழுத்துக் களை, எனக்கென்னவோ, வாய்விட்டுப் படித்தால்தான் ஒரு நிம்மதி இருக்கும்! யாரா வது கேட்கும் பொறுமை சாலிகள் கிடைத்து விட் டால், திரும்பத் திரும்ப வாசித்துக் காட்ட சலித்ததே இல்லை.

பேச்சிலே ஒரு மிடுக்கும், எழுத்திலே ஒரு துடிப்பும், நடையிலே ஒரு வேகமும், கருத்தைச் சொல்வதிலே ஓர் அழுத்தமும், தமிழ் வசன நடையிலே எப் போது ஏற்பட்டது என்றால் அறிஞர் அண்ணு அவர்கள் தமிழிலே பேசப் புறப்பட்ட பிறகு, எழுதத் தலைப்பட்ட பிறகுதான் என்று கோடிட் டுக் குறிப்பிட முடியும்.

அண்ணு அவர்களுக்கு முன்னே, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் எழுத்திலே 'மிடுக்கு' இருந் தது உண்டு! பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பேச்சிலே 'அடுக்கு' இருந்தது



★ அப்துல்சமது எம்.பி

பெரியார் நடந்த ஊர்வலம்

1948-ஆம் ஆண்டு தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் அண்ணு அவர்கள் கலந்து கொள்ளாதது இயக்கத் தொண்டர்களுக்குப் பெருங்குறை யாக இருந்தது. இதை உணர்ந்த பெரியாரவர்கள் அதே ஆண்டில் ஈரோட்டில் ஒரு தனி (ஸ்பெஷல்) மாநாட்டைத் தாமே கூட்டியதோடு அறிஞர் அண்ணு அவர்களையே தலைமை தாங்கவும் ஏற்பாடு செய்தார். அண்ணு அவர்களுக்கு ஏதோ மனக்குறை இருப்பதாக ஊகித்த பெரியார், மாநாட்டன்று காலை நடைபெற்ற ஊர்வலத்தில் அண்ணுவை அமரவைத்து தாம் ஊர்வலத் தின் முன்னே நடந்து வந்தார், இறுதிவரை.

இந்த மாநாட்டில் தான் அண்ணுவிடம் பெட்டிச் சாவியைத் தரப்போவதாகப் பெரியார் அறிவித்தது.

உண்மை!! ஆனால் அவை அவரவருக்கே உரித்தான 'பாணி'யாக இருந்ததே தவிர, ஒரு பாரம்பரியத் தையே உருவாக்கும் முன் மாதிரியாக என்றும் திகழ வில்லை.

ஆனால், அறிஞர் அண்ணு அவர்களின் பேச்சு ஒரு சகாப்தத்தையே தோற்று வித்து விட்டது; எழுத்து, ஓர் இயக்கத்தையே உண் டாக்கி விட்டது; கருத்து, ஓர் அரசியலையே முடுக்கி விட்டு விட்டது.

அண்ணு அவர்களின் பேச்சைக் கேட்டவர்களும், அவரைக் கண்டவர்களும் தாம் ஊக்குவிக்கப் பட்டார் கள் என்பதல்ல; அவரைக் காணுமலே அவருடைய எழுத்தை மட்டும் படித்தவர் கள் கூட அவர்பால் ஈர்க்கப் பட்டார்கள்; இன்றும் ஈர்க் கப்படுகிறார்கள்.

இதையொட்டி, ஒரு சுவை யான சம்பவம் என் நினை வுக்கு வருகிறது.

1945-ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த ஆக்கூரில், "திருக் குர்ஆன் மாநாடு" நடந் தது. அதில் அறிஞர் அண்ணு அவர்களும் கலந்து கொண் டார். அந்தக் கூட்டத்தில் தான் அண்ணு அவர்களு டன் ஒரே மேடையில் முதன் முதலாக நானும் பேசி னேன். அன்று ஆக்கூர் அப்துல் அலீஸ், வடகரை எம். எம். பக்கர், காரை ஏ. எம். யூசுப், நாகூர் ஈ. எம். அலீ ஆகிய என் கெழுதகை நண்பர்களும் பேசினர்கள். நாங்கள் அனை வருமே, அண்ணுவின் பேச் சாலும், எழுத்தாலும் கவரப் பட்டவர்கள்!

நாகூர் இ. எம். அலீ, ஓர் உண்மையைப் பட்டவர்த் தனமாகக் கூறினர்.

"வில் வித் தை யில் தேர்ந்த துரோணுச்சா ரியை ஏகலைவன் நேரிலே காணுமலிருந்தும், ஏப்படி அவரையே குருவாகக் கொண்டு, வில்வித்தை யில் தேர்ந்தானே, அது போன்றே, நாங்கள், அண்ணு அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளாமலிருந்தும் பேச் சாற்றலைப் பெற்று வரு கிறோம்."

மற்ற எவராக இருப்பினும், இதை மிகப் பெரும் பாராட் டாக ஏற்று மகிழ்ந்திருப்பார் கள். ஆனால் அண்ணு என்ன செய்தார் தெரியுமா? அவர் பேசினர்;

"இன்று என் வாழ் நாளிலேயே மகிழ்ச்சிக் குரிய ஒரு நாள். நெடுங் காலமாகவே நான் எண்ணியிருந்தது ண்டு; இஸ்லாமிய இளைஞரி டையே, இப்படியொரு குழு இருக்க வேண்டு மென்று! பிற கூட்டங் களில் நான் பேச பலர் கேட்பார்கள்; ஆனால், இந்தக் கூட்டத்திலே, பலர் பேச நான் கேட் டேன்; அதுவும் இஸ்லா மிய இளைஞர் வாயால் கேட்டேன்.

"ஆனால், இங்கேபேசிய நண்பர், என்னை துரோ ணுச்சாரியாரும், தன்னை ஏகலைவனுக்கும் ஒப்பிட் டுப் பேசினர். தயை செய்து என்னை துரோணுச் சாரியாக்காதீர்கள்; அவ ரும் ஏகலைவனை வேண் டாம். ஏனெனில் ஏகலை வன் நன்றிப்பெருக்கோடு, துரோணுச் சாரியாரிடம் கூறியபோது அவர் என்ன செய்தார் தெரியுமா? தட் சிணை கேட்டார். எதைக் கேட்டார்? வில்வித் தைக்கே இன்றியமையாத கட்டை விரலைக் கேட் டார். அப்படிப்பட்ட தட்சிணையை நான் கேட்க மாட்டேன்; கேட்டால் அவரும் கொடுக்க மாட் டார்." இவ்வாறு அவர் பேசினர்.

என்னைப் பொறுத்த வரையிலே நானும் ஒரு 'பேச்சாளனுவதற்கு,' அண்ணு அவர்களின் அன்றைய பாராட்டுரை, பெரிதும் துணை செய்தது என்று நான் நன்றிப் பெருக்குடன் குறிப்பிட முடியும்.

அண்ணுவோடு தமிழ் என்னைப் பிணைத்தது; அவர் பேச்சும் எழுத்தும் அவர் பக்கம் என்னை இழுத்தன. என் ருலும், அவர் மீது நான் மதிப்பும் மரியாதையும் கொள்வதற்குக் காரணமானவை இரண்டு: இஸ்லாமியத்தைப் பற்றி அவர் கொண்டுள்ள உயர் கருத்துக்கள்; முஸ்லிம் லீக்கிலே அவர் கொண்டிருக்கிற பற்றும், பாசமும்.

அந்த நாளிலே காங்கிரஸை ஆதரித்து ஆயிரத்திற்கு மேற்பட்ட பத்திரிகைகள் எழுதின. தமிழிலே, முஸ்லிம் லீகை ஆதரிக்க 'அரை பத்திரிகை' கூட இல்லை. முஸ்லிம் லீகைத் தாக்கி, காங்கிரஸ் ஏடுகள் வீசும் கண்டனக் கணைகளுக்கு, தக்க பதில், நான் விரும்பிய வகையிலே நான் விரும்பிய மொழியிலே, தந்து வந்த ஏடு, 'திராவிட நாடு' தான்!

முஸ்லிம் லீகைத் தாக்கி, யாராவது பேசிவிட்டால், அண்ணுவின் பேனு முனையிலிருந்து எழுத்துக் கணைகள் எண்ணற்றவை புறப்படும்!

முஸ்லிம் லீகுக்கு எதிராக காங்கிரசின் பிரச்சாரம் உச்சத்திலிருந்த போது, 'தணலில் இடப்பட்ட தங்கம்' முஸ்லிம் லீக் என்று அவர் வரைந்த கட்டுரையை நான் என்றும் மறக்க முடியாது.

என்றும் மறக்க முடியாத, அழிக்க முடியாத எழுச்சி ஓவியங்கள் எண்ணற்றவற்றை அண்ணு எழுதியுள்ளார்.

''திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முஸ்லிம் லீக்கும் உள்ள நட்பு, ஏதோ தேர்தலை முன்னிட்டு, இன்று நேற்று ஏற்பட்ட தல்ல. பன்னெடுங்காலமாகவே இந்த நட்பு இருந்து வந்துள்ளது'' என்று அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி குறிப்பிடும்போது, என்னைப் போன்றோருக்கு, அந்தப் பழைய நினைவுகள் எல்லாம் எழுந்து சான்று கூறுவது இயற்கை தானே!



முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத்துக்கு அறிஞர் அண்ணு அவர்கள் பொன்னாடை போர்த்துகிறார்.



காட்டுக்குக் கனிக்கொத்து சொத்து! நீலக்
கடலுக்கு வெண்முத்து சொத்து! ஒவ்வோர்
வீட்டுக்கும் மாடுமஃ பணம்தான் சொத்து!
வீரனுக்கோ வீரம்தான் சொத்து! பாடும்
பாட்டுக்கோ பண்சொத்து! ஆஃண ஆட்டிப்
படைகின்ற பெண்ணுக்கோ அழகு சொத்து!
நாட்டுக்கே ஒரு சொத்து இந்த நாளில்!
நாமறிவோம்; அச்சொத்து அறிஞர் அண்ணு!

இருமாமல் கஃனக்காமல் வார்த்தை காக
ஏங்காமல் திணருமல் அசிங்க மாக
உறுமாமல் உளருமல் பேசும் பேச்சை
உருவாக்கித் தந்தபுதுப் பேச்சு மேதை!
புரியாமல் — படிப்போரின் பல்லு டைக்கும்
பொல்லாத முரட்டுநடைத் தமிழை ஒன்றும்
தெரியாத மனிதர்களும் தெரிந்து போற்றும்
தேனுக்கி எழுதுகின்ற எழுத்து வேந்தர்!

நாக்கிருந்தால் போதாது! நத்தைக் கும்தான்
நாக்குண்டு; பலர்க்கிங்கே சோற்று நாக்கு!
வாக்கிருந்தால் போதாது! கிளிக்கும் கூட
வாக்குண்டு! வாக்குசெல் வாக்கும் வேண்டும்!
நோக்கிருந்தால் போதாது பலருக் கிங்கே
நோக்கெல்லாம் காசு பணம் சேர்க்கும் நோக்கு!
நாக்கும்நல் வாக்கும்செல் வாக்கும் போக்கும்
நன்னெக்கும் கொண்டவர்தான் அறிஞர் அண்ணு!

பொன்வண்ணக் கொன்றைப்பூ பொன்னு? அல்ல!
புல்நுனியின் பனித்துளியும் முத்தா? அல்ல!
மின்னும்கண் ணுடியெல்லாம் வைரம் அல்ல!
மின்னலெனச் சில'தலைவர்' மின்னி விட்டு
'என்னனுர்?' எனக்கேட்க ஆளே இன்றி
இருந்தஇடம் தெரியாமல் மறைவ துண்டு!
தென்னுட்டின் தனித்தலைவர்! வெற்றி வீரத்
தீரர்களின் மனத்தலைவர் அறிஞர் அண்ணு!

பெற்றுவிட்டான் என்றவுடன் பெண்ணு? ஆணு?
பெற்றபிள்ளை இதுஏழா? எட்டா? என்று
மற்றவர்கள் கேட்கின்ற இந்த நாட்டில்
மதிப்புதனை இவர்பெற்றர்! தமிழைக் கொஞ்சம்
கற்ருரும் திருக்குறள்பேர் அறிவர்! கண்ணுல்
காணுதா ரும் அறிவர் அண்ணு தன்னை!
சுற்ருத இடமில்லை; இவர டுத்துச்
சொல்லாத கருத்தில்லை இந்த நாட்டில்!

அறிவுதனை அறிவிக்கும் அகன்ற நெற்றி;
அடக்கத்தை அறிவிக்கும் எளிய தோற்றம்;
செறிவுதனை அறிவிக்கும் பேசும் சொற்கள்;
சேர்ந்தோரை ஆட்கொள்ளும் கருணை தன்னைக்
குறிப்பாக அறிவிக்கும் புன்சி ரிப்பு;
கூர்விழிகள் படைத்தவர்தான் அறிஞர் அண்ணு!
நெருப்பைப்போல் இவர்சூடு மாற்ரு ருக்கு!
நிலவைப்போல் இவர்குளிர்ச்சி நம்ம வர்க்கு!

காற்றுவரும் போதுசெடி கொடிகள் ஆடும்!
கார்மேகம் வரும்போது மயில்கள் ஆடும்!
போற்றும்ஒளிச் செங்கதிரால் கமலம் பூக்கும்!
பொன்னிலவால் அல்லிமுகம் மலரும்! ஞான
ஊற்ருக நம்நெஞ்சை மாற்றி வைத்த
ஒப்பற்ற பேரறிஞர் அண்ணு வந்தால்
நாற்றிசையும் மக்கள்முகம் மலரும்! பேசும்
நாக்கெல்லாம் அண்ணுவைப் புகழ்ந்து பேசும்!

குடியிருக்கும் இவரிடத்தில் அறிவு! வந்து
கொலுவிருக்கும் இவரிடத்தில் பொறுமை! சொக்கு
பொடியிருக்கு மோஇவர்பால்? தமிழ்ம யங்கிப்
போயிற்ரே இவரிடத்தில்? தேன்ஒ ளிந்த
படியிருக்கும் இவர்நாக்கில்! அதனுல் பேச்சு
பாகைப்போல் தித்திக்கும்! மன்ன ரென்ருல்
முடியிருக்கும் முன்னுளில்! இந்த நாளில்
முடிசூடா மன்னர்இவர் அறிவு மன்னர்!



வாழிய அண்ணே!

புறநானூற்றுக் காலத்துப் புலவரைப்போல் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிப் பாடிய பாடல் இதோ...

யான் வாழும் நாளும் அண்ணன் வாழிய!
தான் வாழும் நினைவை ஓம்பான் மேலும்
யாவரும் வாழவே நாளும் நினைவோன்
தனக்கென முயலான் பிறர்க்குரி யாளன்
தமிழ்க்கென வாழும் தகைசால் அறிஞன்
கற்றது தெளிந்தோன் கருத்தினில் உயர்ந்தோன்
வள்ளுவம் உணர்ந்தே வழிதனை வகுத்தோன்
முத்தமிழ் வித்தகன் பல்கலைச் செல்வன்
தன்மானத் தளபதி தமிழர்தம் செம்மல்
கண்ணியத்தின் ஊற்று கடமைக்குத் தொண்டன்
சிறைக்கு அஞ்சான் தியாகத்தின் திருவுரு
குற்றம் பார்க்கில் சுற்றம்நில் லாதென
பொறுமைக் குணமெனும் குன்றேறி நின்றோன்
மக்கள் ஆட்சியின் மாட்சியை நாடுவோன்
இணையறு பதவியே இயைவ தாயினும்
தனக்கென ஏற்கான், பூட்கை மறவான்
புகழெனின் தன்னையே வழங்கவும் துணிவன்
பழியெனின் எவ்வகை ஆக்கமும் கொள்ளான்
முனிவிலன், அயர்விலன், வஞ்சின முமிலன்
பிறர் அஞ்சு வதஞ்சித் துஞ்சலும் இலன்
அன்ன மாட்சி அனைத்தும் உடையனுய்
அன்பும் அறிவும் சால்பும் சிறந்து
நல்லோர் போற்றும் நல்லிசை மேம்பட்ட
இல்லோர் ஒக்கல் தலைவன் அவனுகலின்
வாழிய அண்ணன், தமிழ் உள்ளளவும்!
வாழிய நெடிதே, வாழிய! வாழியவே.

பேராசிரியர்
அன்பழகன்





உலகம் சுற்றிய அண்ணு

என். வி. நடராசன். M.L.C.

வாழ்க அண்ணு என்று நாம் வாயார மனமார வாழ்த்தும் போதெல்லாம் நமக்கு ஏற்படும் உற்சாகமும் உணர்வும் சொல்லிமுடியாது. கழகத் தோழர்கள் ஒவ்வொருவருக்கும் குடும்பத் தலைவராய், அரசியல் துறையின் தனிப்பெருந்தலைவராய் விளங்கிவரும் நம் அண்ணு அவர்களின் பிறந்த நாள் விழா—கழகத் தோழர்களாகிய நமக்கு மட்டுமல்லாமல், பொதுப் பணியில் நல்லதோர் பண்பாட்டினைக் கடைப்பிடித்து வரும் அனைவருக்குமே உற்சாக மளிக்கும் திருவிழாவாகும்!

நாட்டுக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் அயராது பணிபுரிந்துவரும் அண்ணு அவர்களின் சிறப்புகளை எடுத்துச் கூறுவதென்பது எளிதல்ல. அவரது தொண்டும், அறிவாற்றலும், அடக்க உணர்ச்சியும், பரந்த நோக்கமும் பொது வாழ்வில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவருக்குமே வழி காட்டும் தன்மை படைத்ததாகும். சுருங்கக் கூறின் தமிழக மேடையைத் தமிழ் மேடையாக உருவாக்கி, வருங்கால உண்மையான தேசிய வாழ்வுக்குரிய உயிரங்கமாக்கிய தனிப்பெருமையும் புகழும் அறிஞர் அண்ணு அவர்களுக்கே உரித்தானதாகும்.

அவ்வித வரலாற்றுச் சிறப்புக்குரிய நமது அண்ணு அவர்களை நமது கொள்கைக்குச் சற்று மாறுபட்ட பெரியவர்களோ, வேறுபட்ட அரசியல் கட்சியினரோ, கட்சி பேதம் பார்க்காமல், அண்ணு அவர்களின் ஆற்றலையும் பண்பையும் பாராட்டும் போது நாம் மேலும் மகிழ்ச்சியடைகின்றோம். பெருமிதம் கொள்கிறோம்.

அறிஞர் அண்ணு அவர்கள், அண்மையில் கிழக்காசிய நாடுகளில் சுற்றுப் பயணம் சென்று திரும்பிய தும், மகத்தான வரவேற்பினை நாடு அளித்தது. நல்லோர் அனைவரும் பாராட்டினர். நாமெல்லாம் அளவிட முடியாத மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம்.

ஆனால், நமது அருமை அண்ணு அவர்கள் ஏற்கனவே உலக நாடுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தாயகம் திரும்பி வந்ததும் மாபெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளார்கள். என்ன! அண்ணு அவர்கள் ஏற்கனவே உலக நாடுகள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தார்களா - இது உண்மையா என்று நம் தோழர்கள் ஐயுறக்கூடும். ஆம், அண்ணு அவர்கள் உலக நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து வந்தது மட்டு மல்ல, நற்பண்புகளுக்கு உரித்தான பெரியாரின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார்கள். இதோ அதற்கு சான்று :-

"நான் இதுவரை தோழர் அண்ணுத்துரை

*

அவர்களின் பேச்சை முழுதும் கேட்டேனில்லை. இன்றுதான் அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. அண்ணாதுரைக்கு அறிஞர் அண்ணா என்ற சிறப்பு அமைந்தது மிகப் பொருத்த மேயாகும். இங்கு மாநாட்டுக்குத் தலைமை வகித்து ஆற்றிய சிறப்பு சொற்பொழிவின் வாயிலாக அண்ணாதுரை அவர்கள் தமிழகத்தைச் சுற்றினர்; இந்தியாவைச் சுற்றினர்; ரஷ்யாவைச் சுற்றினர்; அமெரிக்காவைச் சுற்றினர்; ஏன்! உலகத்தையே சுற்றினர்; உலகத்தை நமக்கெல்லாம் காண்பித்தார் என்று கூடக் கூறலாம். அவரது அறிவாற்றலைக் கண்டு நாமெல்லாம் பெருமை கொள்வோமாக. நாடு பெருமையடையுமாக!

1948-ம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற திராவிடகழக சிறப்பு மாநாட்டில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

அரசியல் துறையில் கருத்து வேறுபாடுகளிருப்பினும் பண்பாடு தழுவாமல் பணியாற்றிவந்த தமிழ்ப் பெரியார் போன்ற சான்றோர்களால் பாராட்டப்பட்ட நமது அண்ணா அவர்களின் தலைமை தூய்மையானது, அப்பழுக்கற்றது. அச்சிறப்புக்குரிய அண்ணா அவர்களுடனிருந்து நாமெல்லாம் பொதுப்பணியாற்றும் பேறு பெற்றிருப்பது நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும். எனவே கழகத்தோழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே எண்ணிப்பார்த்து குறைகளிருப்பின் திருத்திக் கொண்டு தோழமையுடன் தொடர்ந்து தொண்டாற்றுவதே நாம் அண்ணா அவர்களுக்குச் செலுத்தும் பிறந்த நாள் பரிசாகும்.

அதற்கு எடுத்துக்காட்டாக கழக உறுப்பினர்களின் எண்ணிக்கையை இப்போதிருப்பதைவிட இரட்டிப்பாகவும், கழகக் கிளைகளின் எண்ணிக்கையையும் அதேபோன்று தழைக்கச் செய்தும், அக்கிளைகள் வலிவுடனும் பொலிவுடனும் இயங்குவதற்கான வகையில் நாம் அனைவரும் தோழமை உணர்வுடன் கூட்டு முயற்சியுடன் பணியாற்றுவதுதான் நமது அருமை அண்ணா அவர்களுக்கு நாம் வழங்கும் பிறந்த நாள் காணிக்கையாகும். இந்தக் காணிக்கை விலைமதிக்கமுடியாதது. எப்பேர்பட்ட எதேச்சாதிகாரத்தாலும் பறிக்கமுடியாதது. எதேச்சாதிகார அநீதிகளையும் ஆட்சி முறைகளையும் தகர் தெறியத்தக்க வல்லமை படைத்தது அக் காணிக்கை!

ஆதலின் அவ்விதத் தோழமை உணர்வுடன், அண்ணா அவர்கள் இடும் அன்புக் கட்டளைகளை ஒன்றுபட்டு நின்று நிறை வேற்றுவோம் என்று தலைநிமிர்ந்து நடை போடுவோமாக! அண்ணா அவர்களும் அவர்களது குடும்பமும் நீடூழி வாழ்க என்று வாழ்த்துவதன் மூலம் நாட்டையும் மக்களையும் வாழவைப்போமாக!

வாழ்க நம் அண்ணா!

வெல்க அவர்கள் தொண்டு!

தவிக்கும் அண்ணா!

வான்புகழும் திருக்குறளை உலகுக்கீந்து
வகைமலிந்த கலைபலவும் வளர்த்த தாயாம்
தேன்வடியும் தமிழ்மொழியின் திறத்தைப் போற்றித்
தென்னகத்தின் பழஞ்சிறப்பை மீட்போம் என்று
ஊன்உருக உளம்உருக உணர்ச்சி பொங்கி
ஊக்கமதைத் தூக்கிவிடும் உரைகளாற்றி
தான்பிறந்த தமிழ்நாட்டின் மேன்மைக்காக
தவிக்கும் அண்ணாத் துரையவர்கள் வாழ்க!

—நாமக்கல் கவிஞர்

நாகரீக - நல்லுலகம்

மா. கி. சரதன் -

எது நாடு? விண்ணை இடிக்கும் மலையும், மண்ணைக் கிழித்து ஓடும் ஆறும், செந்நெல் விளையும் வயல்களும் இவை போன்ற பிறவளங்களும் மட்டும் நாடு அல்ல. மலை, ஆறு, வயல் இவை இருக்கின்றனவோ இல்லையோ, மனிதர் இருக்க வேண்டும்; நாடு என்னும் போது நாலு பக்கமும் சூழ்ந்துள்ள எல்லையைவிட, நாலு எல்லைகளுக்குள்ளே வாழும் மக்களையே அது குறிப்பிடுகின்றது. மக்கள் கூட்டமாகக் கூடி வாழத் தகுப்பட்டதினால்தான் நாடு என்னும் அமைப்பையே நாடினர்.

நாடு, என்று இன்று குறிப்பிடும்போது மக்கள் நம் முன் தோன்றவில்லை. மக்களைவிட்டு வேறு ஏதோ ஒன்றைக் கற்பனை செய்து கொண்டு அதுவே நாடு என்று எண்ணிக் கொள்ளுகின்றோம். ஆனால் உண்மையில் மக்களே நாடு, அது போலவே மக்களுடைய கூட்டு வாழ்க்கைக்காக உருவான அமைப்பே அரசு. ஆனால் இன்று அரசு என்று கூறும்போது, கூட்டு வாழ்க்கையின் பயனுக உருவானது அது என்ற எண்ணம் மறைந்து, அரசு என்பது ஏதோ ஒரு தனி நிறுவனம் போலவும், மக்கள் எல்லோரும் அந்த நிறுவனத்தின் ஏவலர்போலவும் எண்ணி விடுகின்றோம்.

நம்முடைய முன்னோர், இப்படிப்பட்ட தவறான போக்குடையவர்களாக இருந்தது இல்லை. நாடு என்பதும் நாட்டு ஆட்சி (அரசு) என்பதும் என்ன என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

நிலம், மேடோ பள்ளமோ அதைப்பற்றி அக்கறை இல்லை; எங்கு மக்கள் நல்லவர்களாக இருக்கின்றனரோ, அதுவே நல்ல நாடு என்று அவர்கள் எண்ணினர். 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை நிலனே' என்று ஔவையார் கூறுகின்றார். அத்தகைய நாட்டுக்கு ஆட்சி இன்றியமையாதது என்று கருதியிருந்தனர். அதனால்தான் திருவள்ளுவர் நாடு பற்றிப் பல கூறியபின்னர், எல்லாம் இருக்கிறது, எனினும் ஆட்சி அமைப்பு இல்லையேல் ஏதும் பயன் இல்லை என்று கூறுகின்றார். 'ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே, வேந்து அமைவு இல்லா நாடு' என்று கூறுகின்றார் அவர். வேந்து என்று வள்ளுவர் கூறுவது ஆட்சியை—அரசை. அரசு நல்லரசாக இருந்தால்தான், நாட்டுச் செல்வம் மக்களுக்குப் பயன்படும்; மக்கள் நல்வாழ்வு நடத்த முடியும்; நாட்டிலே அமைதி நிலவும். இல்லையேல் எது இருந்தும் எந்தப் பயனும் விளையாது போகும்.

நல்ல ஆட்சி என்பது ஆளுவோரால் அமைவதே ஆகும். அன்றைய ஆட்சியாளர்கள் நல்ல ஆட்சி அமைய வேண்டும் என்று அக்கறை கொண்டனர். தங்கள் ஆட்சியில் உள்ள குற்றங் குறைகளைப் பிறர் கூறும்போது காது கொடுத்து அவற்றைக் கேட்டு, குறை போக்கி நிறை செய்தனர். 'நான் மன்னன். எனக்கா

நீவிர் அறிவுரை கூறத் துணிந்தீர்கள்?' என்று சினந்தது இல்லை. சான்றோர்கள் அறிவுரைகளைக் கூறியபோது அவற்றைக் கேட்டுத் திருந்தினர். சங்க இலங்கியங்கள் அத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றை அறிஞர் சொல் கேட்டு அரசு திருந்தியதைப்பற்றிய நிகழ்ச்சிகளை — நமக்குக் காட்டுகின்றன. பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சென்று பிசிராந்தையார் என்னும் புலவர் 'இப்படி ஆளவேண்டும்—' என்று கூறுகின்றார். கூறுகின்ற துணிவு புலவர்க்கிருந்தது. கூறியதை பொறுமையாகக் கேட்டுக் கொள்ளும் பண்பு அரசனிடம் இருந்தது. 'செவி கைப்பச் சொல் பொறுக்கும் செவ்வி பெற்றவர்களாக அன்றைய ஆட்சியாளர் இருந்தமையால் புலவர்கள் பொது வாழ்வில் அச்சமின்றித் தம் கருத்தைக் கூறிட முடிந்தது.

இத்தனைக்கும் அன்றைய ஆட்சியாளர்கள் — மன்னர்கள் — ஐந்தாண்டு ஆட்சியாளர்கள் அல்லர்; ஆளும் உரிமையைப் பிறப்பால் பெற்றிருந்தவர்கள். யாருக்கும் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லாதவர்கள். எனினும் சான்றோரின் அறிவுரைகளை கேட்டு, தம் ஆட்சியை நன்கு நடத்திச் சென்றனர். யாரும் தம் கருத்தை எடுத்துச் சொல்லும் உரிமை படைத்திருந்தனர். கருத்துக்குத் தடை போட்ட நிகழ்ச்சிகளை எதனையும் தமிழ் இலக்கியங்கள் நமக்குக் காட்டவில்லை.

இன்றும் நாகரிகம் வளர்ந்துள்ள நாடுகளில் கருத்துக்குச் சுதந்திரம் இருக்கின்றது. அறிவுக்குத் தடையோ, கருத்துக்கு வேலியோ அங்கெல்லாம் இல்லை. ஏனெனில் மனிதனை வளர்ப்பவை, வாழ வைப்பவை கருத்துக்களேயாகும். நெல்லும் நீரும் உடலை வளர்க்கும். உடல் வளர்ச்சி மட்டும் வாழ்க்கையாவது இல்லை. வெறும் உடல் வளர்ச்சி வாழ்க்கை விலங்கின வாழ்க்கையாகின்றது. விலங்கைவிட வேறுனவன் மனிதன்; உயர்ந்தவன் அவன். அதனால் உடலை விட, உடல் வளர்க்கும் சோற்றைவிட, அவனுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ள வேறு ஒன்று இருக்கிறது. அது மனிதனின் கருத்து ஆகும். கருத்து, எண்ணம், சிந்தனை,—இவை மனிதனை வளர்ப்பவை என்பதை நன்குணர்ந்திருப்பதினால் தான் நாகரிக நாடுகள் அறிவுக்குச் சிறை ஏற்படுத்துவது இல்லை.

கருத்து, மனிதனுக்கு மனிதன் வேறுனதாக இருக்கும்; காலத்திற்கு காலம் மாறுபடும்; நிலைமைக்கு ஏற்றவாறு உருவாகலாம். இன்று நல்லது நாளை கெட்டது ஆகலாம்; நேற்று தேவையற்றது இன்று தேவையுள்ளதாகலாம்.

ஆகையால் கருத்தைக் கட்டுப்படுத்துவது என்பது முறையான செயல் அன்று.

இங்கிலாந்து நாட்டில், நாடகங்களைத் தணிக்கை செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. எல்லா நாடகங்களும் தணிக்கைக்கு உட்பட்டே வெளி வரும். ஆனால் தணிக்கையாளர்கள் "காலத்தின் போக்கையும் மக்களுடைய கருத்தையும் கவனித்துச் செயலாற்றுகிறார்கள். பத்தாண்டுகளுக்கு முன்பு சர்ச்சையைக் கிளப்பிய பல நாடகங்களை இப்போது மக்கள் பார்த்து மகிழ்கிறார்கள்" என்பது அங்குள்ள நிலைமையாகும். தணிக்கையாளர்கள் என்றதும் அவர்கள் தடையாளர்களாக இருந்து தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதும், காலத்தின் போக்கை உணராத கண்மூடிகளாக இருக்க வேண்டும் என்பதும் அங்குள்ள நிலைமை அல்ல.

பத்தாண்டுகளுக்கு முன் சர்ச்சையைக் கிளப்பிய நாடகத்தை இன்று பார்த்து மகிழ்கின்றார்கள். ஆனால், சில நாடுகளில் பத்தாண்டுகளுக்கு முன் பார்த்து மகிழ்ந்த நாடகங்களை இன்று நினைத்து மகிழ வேண்டியதாகின்றது!

மக்களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவை அடிப்படைத் தேவை. இவை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் முக்கியமாகக் கிடைத்தே தீர வேண்டியது ஒன்றுண்டு. அது கருத்துச் சுதந்திரம். கருத்தை வெளியிட உரிமையில்லையேல் நாட்டு வாழ்க்கையைவிட காட்டு வாழ்க்கையே மேலானதாகும். அதனால் தான் பழைய தமிழ்ப் பாட்டு ஒன்று கொடுங்கோல் மன்

னன் நாட்டில் வாழ்வதை விடக் கடும்புலி வாழும் காட்டிலே வாழலாம் என்று கூறுகின்றது.

காடுதான் நாடாகியுள்ளது; அது வளர்ச்சிக்கு அடையாளம். நாடு காடு ஆகிவிடுமானால் அது எதற்கு அடையாளம்? மனிதன் விலங்காகி விட்டான் என்பதற்குத்தானே அடையாளம்?

இத்தனை ஆண்டுகளாக மனிதன் வாழும் வாழ்க்கை நாகரிகம் பெற வேண்டும் என்பதற்காகும். மனிதனை நாகரிகப்படுத்துவது அவனுடைய எண்ணங்கள்தாம். மனமே மனிதனை இயக்குகின்றது. எனவே புதிய புதிய எண்ணங்கள் பூக்கும் போது அவற்றைக் கிள்ளி எறியாமலிருந்தால் தான் அவை காலப் போக்கில், பிஞ்சுவிட்டு, காய்த்துக் கனியாகும்—பயன்படும். பூவே பூக்காதே — என்பதைப் போல் கருத்தே தோன்றக் கூடாது — தோன்றினாலும் அதனை வெளியே சொல்லக் கூடாது என்பது அநாகரிகம் மட்டும் அல்ல; அறியாமையும் ஆகும்.

நாம் நாகரிகம் அடையப் போகிறோமா — இல்லை அறியாமைச் சேற்றிலேயே கிடந்து உழலப் போகிறோமா? நம்முடைய தலை முறையில் விடை கண்டாக வேண்டும். இன்று உலகம் அத்தனையும் நாகரிகம் பெற்று வருகிறது. கதிரவனின் ஒளியும் நுழைய முடியாத ஆப்ரிக்கக் காடுகளில்கூட கருத்துச் சுதந்திர ஒளி பரவி வருகிறது. நாமோ முதன் முதலில் மனிதர்கள் ஆனவர்கள்; ஆடை அணிந்தவர்கள்; வீடு கட்டிக் கொண்டவர்கள்; நாடு கண்டவர்கள்; நல்லாட்சி பெற்றவர்கள் என்றெல்லாம் பெருமை கொள்ளுகின்றோம். பழைய பெருமையைப் பேசினால் வயிறு நிறைந்துவிடுமா? புதிய நிலை என்ன? கருத்தைக் கூறுவதற்கு, கோவூர் கிழார்க்கு இருந்த உரிமை, பிசிராந்தையார்க்கு இருந்த உரிமை நமக்கும் இருக்கிறதா என்று புலவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் 'கற்றல் நன்று' என்று பாடியுள்ளான். அறிவுடையோன் காட்டும் வழியில் அரசும் செல்லும். ஆகவே கற்றோன் ஆதல் நன்று என்பது அவன் கருத்துரை. அந்த நல்ல நிலை — அறியுடையோன் ஆறு அரசும் செல்லும் நிலை — அறிஞர் காட்டும் வழியில் அரசு அமையும் நிலை — உருவாக வேண்டுமானால் கருத்துக்குத் தடை இருத்தல் ஆகாது.

கருத்துக்கள் நாகரிக நல்லுலகின் வாயில்கள் ஆகும். அவற்றை மூடி மூடங்கி விடாமல், திறந்து வைத்து ஒளி பெறுவோம்!

தனி பலம்!

அண்ணாதுரை அலங்காரப் பிரியர்! உடையில் அல்ல! எண்ணத்தில்! சந்த ஓசையுடைய சொற்களை பதமாகச் சிலம்பமாட வைப்பதில் சூரர். அப்படியே வரட்சி மிகுந்த அரசியலிலும் இலக்கிய நயத்தைச் செருகி இன்புறுச் செய்யக் கூடியவர். இன்னும் கூறுவதென்றால் அவருடைய அரசியல் பேச்சில் அரசியலைவிட இலக்கிய மணமே விஞ்சி நிற்கும்.

அவருடைய கலை உள்ளம் அவருக்குத் தனி பலம்!

தமிழ் உள்ளத்தையும், ஆங்கில மெருகையும் கலந்து புதிய பாணியைத் தனக்கென வகுத்துக் கொண்டவர் அரசியல் உலகில் அண்ணாதுரை ஒருவரே!

—சுதேசமித்திரன்

(19—9—64 அன்று ஜே. லி. கே. என்பார் எழுதிய கட்டுரை)




காலை எழுந்தவுடன் படிப்பு



குளிப்பதற்குச் செல்கிறார்



அண்ணாவுடன்




குளித்த பிறகு ஆடையணிந்து கடிதங்களைப் பார்க்கிறார்





உணவுக்கும் சிறிது இடமுண்டு



கடிதங்களுக்குப் பதில் எழுதுகிறார்






வீடு தேடி வந்த கழகத்தோழருடன் பேசுகிறார்

ஒருநாள்






மூத்த மகன் பரிமளத்துடன் மகிழ்ச்சி உரையாடல்



அண்ணவின் நூலகம்



இதற்கிடையில் வானொலிச் செய்தியையும் கேட்கிறார்



காஞ்சி நகராட்சித் தலைவர்
தங்கவேலருடன் நகைச்சுவை
கலந்த உரையாடல்






மாலைநேரக் கல்லூரியான
பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்

இரவில் மீண்டும் படிப்பு







அனைவரையும் அழைக்கிறார்!

ஓ. எம். சுப்பிரமணியன்

அன்புள்ள நண்பரே!

தங்களது கடிதத்திற்கு நன்றி. திரு. அண்ணாதுரை அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாட விருக்கிறீர்கள் என்பதையறிய மகிழ்ச்சி யடைகிறேன். இத்தகைய பாராட்டுதல்கள் அவருக்கு மிகப்பொருத்தமானவை; தமிழகத்தின் சாதாரண மனிதர்கள் விழிப்படையவும் எழுச்சிகொள்ளவும் இந்த நாட்டில் அளவிடா முயற்சிகளில் ஈடுபட்ட சிலரில் அவர் ஒருவராவார். அவருக்கு எல்லா வெற்றிகளும் கிட்டவும், நீண்ட—பயனுள்ள வாழ்வு கிடைக்கவும் உங்களுடன் சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன். நான் இத்துடன் அவரைப்பற்றிய பாராட்டுக் கட்டுரை ஒன்றை இணைத்திருக்கிறேன். அதை உங்கள் ஏட்டிற்கும்-வேறு நற்காரியங்களுக்கும் பயன்படுத்தினால் நான் மகிழ்ச்சியடைவேன்.

தங்கள் விசுவாசமுள்ள,

என். ஜி. ரங்கா.

திரு. அண்ணாதுரை தி.மு. கழகத்தின் மிக உயர்ந்த தலைவர். தமிழகத்திற்கு வெளியே யுள்ள மக்கள் நீண்டகாலமாக "தி.மு.க. எதற்காக இயங்குகிறது? அதன் தலைவர் எப்படிப்பட்ட மனிதராக இருப்பார்?" என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தனர்.

1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் காலத்தில் காங்கிரசின் கேடு கெட்ட முறையில் அமைந்த கபட வேஷத் தேர்தல் பிரச்சாரத்தினால் காஞ்சித்தொகுதி வாக்காளர்கள் கெடுக்கப்பட்டனர். அவர் தமிழக சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் படுவது தடுக்கப்பட்டு தோல்வியடைந்தார். ஆனால் எவரும் அறிந்து கொள்ளாமலேயே, காஞ்சி மக்கள் தி.மு. கழகத்திற்கும், இந்திய மக்களுக்கும் பெரிய நன்மையைச் செய்தார்கள்.

எப்படியெனில், இந்த தேர்தல் முடிவின் மூலம் அவரை மாநிலங்களவைக்கு



பேராசிரியர்: என்.ஜி.ரங்கா

அனுப்பி, அகில இந்திய அரசியல் மேடையில் ஏறும் படி வற்புறுத்தி விட்டனர்.

மாநிலங்களவையின் முதற் கூட்டத்திலேயே அவர் இந்தியா முழுமைக்கும் ஒரு பாடத்தை போதித்தார்.

தி.மு. கழகத்தின் தேச பக்தி நிரம்பிய கோரிக்கை களை எடுத்துரைத்தார்; தி.மு. கழகத்தின் உணர்ச்சி பொங் கும் கூட்டரசு அமைப்பு முறையை விளக்கினர்; அந்த அமைப்பு முறையால் தமிழகம் எல்லாவகைகளி லும் முழுமையான வளம் பெறும் என்பதையும் உண் மையான கலாச்சார-அரசி யல் ஆதிபத்ய உரிமையை அனுபவிக்கும் என்பதையும் எடுத்துரைத்தார்.

கம்யூனிஸ்ட் சீனம் இந்தியாவை ஆக்ரமித்த போது, தி.மு. கழகத்திடம், இந்திய அரசியல் அமைப்பு முறையை அடியோடு மாற் றக் கோரும் அதன் கோரிக் கையைத் தள்ளி வைக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிற அளவுக்கு பெருந் தலைவர் நோக்கு அவரிடம் இருந்தது.

ஆக்ரமிப்புக் கெதிரான ஐக்கிய இந்தியாவின் முயற் சிக்கு முழு மனதோடு ஒத்து ழைப்புத் தந்தார்.


அவரது சொல்லாற்றல், விசுவாசம், வாதமிடும் திறமை, கால மாற்றத்தின் கோரிக்கைகளுக்கு மதிப்புக் காட்டும் அப்பழுக்கில்லாத சக்தி ஆகியவை டில்லி மேடைகளிலும், மாநிலங் களவையிலும் கண்ணுக்குப் புலனுயின; பாராட்டுதல் களும் வந்தனர்.

இவ்விதம் அனைத்திந்திய அங்கீகரிப்பை வேண்டிய அளவு, தமக்கும் தமது நோக்கத்திற்கும் திரு. அண்ணுதுரை பெற்றார்.

அவரது கல்லூரி நாட்களி லிருந்து அவரைப் பற்றி அறிந்திருக்கும் பெருமை எனக்கு உண்டு. புகழ் பெற்ற பச்சையப்பன் கல்லூரியில் நான் சரித்திர, பொருளா தார, ஆசிரியராயிருந்த போது, அவர் பி.ஏ. வகுப்பு மாணவராய் இருந்தார். அந் தக்காலத்திலிருந்த கர்வமில் லாத - உறுதியான - வெற்றி கொள்ளும் சுபாவத்தை இந் தக்காலத்திலும் விடாது அவர் கைக் கொண்டு வரு வதையறிந்து நான் மிக மகிழ்கிறேன்.

மனித உரிமை, சம வாய்ப்பு இவற்றுக்காக அவர் நிற்கிறார். 1917-25 ஆண்டு களில் சுயமரியாதை இயக் கத்தில் நாங்கள் பணியைத் துவக்கினோம்.

பார்வதி, பரமேசுவன் அல் லது கடவுள் என்று பொது வாகக் கூறப்படும் நிரந்தர உண்மையின் முன்பு எங்கள் நடவடிக்கைகளிலும் — ஆல யங்களின் எல்லைகளிலும்,



அண்ணன் ஆழ்ந்துபடிக்கிறார்
எதையோ!
ஆழ்ந்த அறிவுடையோர் அழகு
அதுதானே!

தொடர்புகளிலும் சம உரிமை வேண்டி நின்றோம்.

நமது வேதம், உபநிஷதம், ஸ்மிருதி ஆகியவற்றுக்குத் தரப்பட்ட தவறான விளக்கங்களுக்கு அடிமைப்பட்டு, — துயரப்பட்டுக்கிடப்பதிலிருந்து நமது இதயங்கள் விடுபடவேண்டும் என்று விரும்பினோம்.

மன, சமூக, மத சூழ்நிலைகளின் இரும்புப்பிடியிலிருந்து விடுபட்டு உயரவேண்டும் என விரும்பினோம்.

பாவம்—தண்டனை என்ற பயங்களை உடைத்தெறிந்து முன்னேறவேண்டும் என்பதில் குறியாய் இருந்தோம்.

ஆந்திராவில் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கிவைத்தவர் தெனாலியைச் சார்ந்த காலஞ்சென்ற டி. ராமசாமி சவுத்திரியாவார். 1917—27 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த அவர் ஒரு கவிஞர்; சமுதாய சீர்திருத்தவாதி; மிக முக்கியமான சுயமரியாதைக்காரர்.

ஆனால், பலர் சுயமரியாதைக்காரர்களாயிருந்தும் ஜஸ்டிஸ் கட்சியில் சேரவில்லை. ஏனெனில் அக்கட்சி பிரிட்டிஷ் ஆதரவுக்கொள்கையைக்கொண்டிருந்தது.

நாம் காங்கிரசில் சேர்ந்தபோது ஈ. வெ. ராமசாமி நாய்க்கர் காங்கிரசை விட்டுப்பிரிந்து திராவிடர் கழகத்தை வளர்த்தார். தமிழகத்தில் சுயமரியாதைக்காரர்களின் அரசியல்—சமூக மேடையாக திராவிடர் கழகத்தை அவர் உருவாக்கினார்.

அப்போதுதான் அண்ணாதுரை, கவிஞர்கள், எழுத்தாளர்கள், சமூகத்தலைவர்கள், சினிமாக்கவிஞர்கள் ஆகியோர் அடங்கிய அணியினருடன் தோழமை பூண்டார்.

தமது நிர்மாண முயற்சிகளின் மூலமும்—சமுதாயத்தின் ஒளிமிக்க சிற்பிகளின் உதவியுடனும் தமது கட்சியை மிகத்திறமைமிக்க—சக்திவாய்ந்த அரசியல்—சமூக அமைப்பாக மாற்றி விட்டார். இந்நாட்டிலேயே மக்கள் பெருங்கூட்டமும், நிதியும், உற்சாகமும், செல்வாக்கும் மிக்க கட்சியாக—தி. மு. கழகத்தை மாற்றி விட்டார்.

பத்தாண்டு இடைவெளியில், தி. மு. கழகம் அரசியல் அமைப்புகளிலேயே அதி சயிக்கத்தக்க அமைப்புகளில் ஒன்றாக இருக்கிறது.

எந்தவிதமான அகில இந்திய மேடையுமில்லாமல்—அகில இந்திய பத்திரிகை வசதியுமில்லாமல்—அகில இந்தியத் தலைமையுமில்லாமல்—அகில இந்தியத்தத்துவ விதிகளுமில்லாமல் பெரிய அளவுக்கு அக்கட்சி வளர்ந்திருக்கிறது.

நூறு சதவிகிதத்திற்கு மேலும் இந்திய மண்ணுக்குரிய அடிப்படை-தத்துவம்-எந்த வெளி நாட்டுக்கொள்கையையும் ஏற்காத சுதந்திரத்தன்மை—எந்த வெளி நாட்டு அரசியல் தொடர்பு மில்லாத தன்மை ஆகிய இப்பண்புகள் கொண்ட கட்சிக்குப் பரிசு என்றால்-முதல் பரிசு நிச்சயம் தி. மு. கழகத்திற்குத்தான்!

கடந்த பத்தாண்டுகளாக தி. மு. கழகத்துடன் கூட்டு சேர கம்யூனிஸ்டுகளும், பி. எஸ். பி.யும், எஸ். எஸ். பியும், ஜனசங்கமும் முயற்சி எடுத்தன.

ஒரு சொல்!

பேசுபவர்களை விடக் கேட்பவர்கள் நிறைய அறிந்திருக்கிற நாட்டில் தான் சிந்தனையும் வளரும்; பேச்சும் சிறக்கும்!

—அண்ணா

பல குறிப்பிட்ட காரணங்களுக்காக அண்ணாதுரை அவர்களுடன் ஒத்துழைப்பதைப்பற்றி கவலை எடுத்துக்கொள்ளவில்லை.

இந்திய மன்பதையின் அடிப்படை உரிமைகளையும், தேவைகளையும், கொள்கைகளையும் புறக்கணித்த தத்துவங்களில் கட்டுண்டு கிடக்கும் அந்தக் கட்சியினரைப் போல் அல்லாமல், அதிலிருந்து தப்பித்துக்கொண்டார்.

தி. மு. கழகத்துக்கும் சுதந்திராக்கட்சிக்கும் அடிப்படையான வேறுபாடுகள் பல இன்னும் இருக்கலாம். ஆனால், சிறந்த சமுதாய சிற்பியும், சக்திவாய்ந்த மக்கள் தலைவருமான அண்ணாதுரையின் நல்ல பண்பை வாழ்த்துவதற்கு—அவரது மாபெரும் வெற்றிகளைப் பாராட்டுவதற்குக் குறுக்கே எந்த வேறுபாடுகளும் நிற்கமுடியாது.


இன்னும் அரை நூற்றாண்டு காலம் பொதுப்பணியாற்றும் அளவுக்கு அவர் இளமையோடிருப்பதைக் கண்டு மகிழ்கிறேன். அவருக்கு நல்லது விளைய வேண்டுமென விழைகிறேன். வருங்காலத்தில் அவரிடமிருந்து நமது சமுதாயம் நிறையப்பெற வேண்டியிருக்கிறது என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். *



குடிமக்கள் இணை.....

மக்கள் நன்மைக்காக மக்களால் நடைபெறுவது மக்களாட்சியாகும். இக் கொள்கை தமிழகத்துக்குப் புதியதன்று. முடிசூடிய மன்னரும் தாம் மக்கள் நன்மைக் காகவே ஆளுகின்றோம் என் பதை நன்கு உணர்ந்து நாட்டை ஆண்டனர். அதனாலேயே "நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்" எனப் புகழ் கின்றனர். வாழ்வியல் உரைத்த வள்ளுவர் பெருமகனும் "குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன் அடிதழீஇ நிற்கும் உலகு" என மக்களுக்காக ஆளும் மன்னரின் மாண்பை எடுத்துரைத்தார்.

வழிவழியே மன்னர்களே நாட்டின் காவலராய் நல்லாட்சிக்குப் பொறுப்புடையரேனும், ஊர்கள்தோறும் அவைகள் அமைந்து மக்களுக்கான தொண்டுகளைச் செய்து வந்தன. பாராளுமன்ற ஆட்சி முறையின்



பிறப்பிடம் தமிழ்நாடாகும். ஊராட்சி முறைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட விதம் இன்றும் போற்றிக் கொளற்பாலது. அன்று உறுப்பினர்களைப் பல்வகைத் தகுதிப்பாடுகளுடன் பொறுக்கி எடுத்தார்கள். ஆனால் இன்றும் தேர்ந்து எடுக்கின்றோம். தேர்ந்து எடுப்பதிலும் கட்சி முறை புகுந்துள்ளது. இக் கட்சி ஆட்சி முறை நமக்கு முற்றிலும் புதிதே. இதற்குத் தாயகம் இங்கிலாந்துதான். ஆங்கிலேயர்களால் ஆளப் பட்ட நாம் அவர்கள் ஆட்சி முறையைப் பின்பற்றுவதில் வியப்பில்லை; புதுமையில்லை. ஆனால் கட்சி ஆட்சி முறை அங்கு வெற்றி பெற்று வருவதுபோல இங்கு வெற்றி பெற இன்னும் பல பத்தாண்டுகள் செல்ல வேண்டியிருக்கும் போலும்.

தமிழ் நாட்டில் சாதி வெறி நாளுக்குநாள் நஞ்சுபோல் ஏறி வருகின்றது. மக்களில் பெரும்பாலோர் வறுமையில் உழலுகின்றனர்; மூட நம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். ஆகவே கொள்கை வழியில் கட்சி கூட நாடாமல் வேறு காரணங்களுக்காகக் கட்சி கூடச் சாருகின்றனர்.

இந்நாட்டின் அயலவர் ஆட்சியை அகற்றப்போரிட்டது காங்கிரசுக் கட்சிதான். அந்த ஒரு காரணத்தைக் கொண்டே இன்னும் நூறுண்டுக்குத் தானே நாட்டை ஆள வேண்டுமென்று பெரு விருப்பம் கொண்டுள்ளது. ஏறக் குறைய கால் நூற்றாண்டாக நாட்டை ஆண்டு வருகிறது.

இங்கிலாந்தில் இரண்டாம் உலகப் போரைத் திறமையாக நடத்தி வெற்றி கண்ட சர்ச்சிலையும் அவர் கட்சியையும் போர்முடிந்த உடனே மக்கள் புறக்கணித்துவிட்டனர். போரை வென்றதன் காரணமாகத் தாமும் தம் கட்சியும் வழி வழியாக நாட்டை ஆளும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டும் என்று அங்குத் தேர்தல் போராட்டம் நடத்திலர். இங்கோ காங்கிரசுக் கட்சி நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்த கட்சி என்று பெருமை பேசிக் கொண்டு தன்னையே என்றும் ஆளும் கட்சியாகவைத்துக்கொள்ள விரும்புகிறது.


தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் காங்கிரசுக்கு— ஆளும் கட்சிக்கு எதிர்க் கட்சியாக உருவாகி வருவது திராவிட முன்னேற்றக் கழகம்தான். அடுத்த தேர்தலிலேனும் காங்கிரசுக்கட்சி ஆளும் நிலையிலிருந்து அகற்றப்படவேண்டும். இன்றேல் மக்களாட்சி முறைக்கு — கட்சியாட்சிமுறைக்குச்சாவு மணி அடித்துவிட்டதாகவே கருத வேண்டும். ஒரு கட்சி ஆட்சிமுறை வேரூன்றிக் கொடுங்கோன்மை வெற்றி பெற ஏதுவாகும். செங்கோன்மை தழைக்க—நாட்டு மக்கள் உரிமையோடு வாழ ஒரு கட்சியே என்றும் ஆளுதல் ஒழிய வேண்டும். ஆகவே அறிஞர் அண்ணா அவர்கள் தமது கட்சியாம் திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்று மக்களாட்சியில் நம்பிக்கையுடையோர் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஐம்பத்தேழு ஆண்டை அடையும் அறிஞர் அவர்கட்கு எல்லா ஆற்றல்களும் உண்டு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தந்தையும் தலைவரும் அவரே. தம் தோழர்கட்குக் "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்பவற்றில் நம்பிக்கை கொள்ளச் செய்து மக்களாட்சி நெறி மாண்புற அயராது உழைத்து வரும் அரசியல் அறிஞராவார்.

"வினை வலியும், தன் வலியும், மாற்றுன் துணைவலியும், தூக்கிச் செயல்" புரியும் திண்மையும், "பொருள் கருவி, காலம், வினை, இடனோடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல் புரியும்" ஆற்றலும், ஞாலம் விரைந்து தொழில் கேட்கத் தாம் கூறியவற்றை




டாக்டர்
சி. இலக்குவனார்



நிரந்தினிது சொல்லும் சொல் வன்மையும் ''கொக்கு ஒக்கக் கூம்பும் பருவத்து ; மற்றதன் குத்து ஒக்கச் சீர்த்த விடத்து'' என்ற அரசியல் செயல் முறையும் உடைய அரும் பெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவருக்கு இணை அவரேயாவார். தலைவர், பேச்சாளர், நடிகர், கவிஞர், ஓவியர், எழுத்தாளர் எனும் பல புகழ் நிலைகட்கு உரியவராய், அடக்கமும் அன்பும், எளிமையும், இனிமையும் அணிகலன்களாய் உடையவர். இவர் இன்னும் பல்லாண்டு நிறை நலனுடன் வாழ வேண்டும். தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலைவராய் மக்களாட்சிக் காவலராய் மன்பதை போற்றப் பல்லாண்டு வாழ்வாராக. அறிஞர் அண்ணாவின் வெற்றி மக்களாட்சியின் வெற்றியாகும். தமிழ்த் தாயின் வெற்றியாகும் ! வாழ்க அண்ணா ! ✱

அடடா — என்ன நினைவாற்றல் !

காஞ்சீபுரத்தில், அண்ணா அவர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சர். ஏ. ராமசாமி அவர்கள் ஆங்கிலத்தில் பேசினர். மொழி பெயர்ப்பாளர் சரியாக மொழி பெயர்க்கவில்லை. அண்ணா அவரை உட்கார்ச் சொல்லி விட்டார். பிறகு அண்ணா அவர்கள் பேச எழுந்தார். சிறிது நேரம் பேசிக்கொண்டே இருந்துவிட்டு, ''இதுவரை நீங்கள் கேட்டது சர். ஏ. ராமசாமி அவர்கள் பேசியதாகும். இனிமேல் பேசுவது என்னுடையதாகும்'' என்றார். சர். ஏ. ராமசாமி அவர்கள் மேடையில், அண்ணா அவர்களின் பேச்சு வன்மையையும், நினைவு ஆற்றலையும் கண்டு வியந்து பாராட்டினர்.



மற்றுமொரு காந்தி!

அண்ணாவின் 57-வது பிறந்தநாள் நாம் அனைவரும் பெருமைப் படக்கூடிய நாள். நமது அண்ணன் காட்டும் வழியில் நாம் நடப்போம். என சொல்லும் நன்னாள்.

அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் எனப் பெருமையாகப் பேசிடும் திரு நாள். அவருடைய தலைமை தான் நாட்டுக்கும் நமக்கும் நம்முடைய சந்ததிகளுக்கும் நன்னாளாக அமையப் போகின்றன.

நடிகனைப் பாராட்டி பத்திரிகையிலே முதன் முதலாக எழுதிய மேதை அவரே! நடிகனை தலை நிமிர்ந்து நடக்கச் செய்த உத்தமர் அவரே. காஞ்சி கல்லூரிக்கு, நிதி சேர்த்து கொடுப்பதற்காக அண்ணா முனைந்தார்கள். அப்பொழுது அவ்வை. டி. கே. சண்முகம் அண்ணன் பேசினார்கள். அவர் நடத்திய நாடகத்தின் முடிவில் நான் மேலே சொன்ன கருத்துக்களை மிகவும் அழகாக எடுத்துச் சொன்னார்கள். அவர் வேறு கட்சியில் இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து நாட்டுக்குப் பாடுபடவேண்டும் என்று 15 வருடங்களுக்கு முன்பே அண்ணா அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துக் கொண்டார்கள். காலம் சீக்கிரம் நம்மை ஒன்று படுத்தும் என இன்னமும் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் நாட்டின் நன்மைக்காக.

இவ்வளவு குறுகிய காலத்தில் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்தது போல் உலகத்திலேயே வேறு எந்தக் கட்சியும் வளர்ந்ததில்லை. இவ்வளவு வளர்ந்ததற்குக் காரணம் நமது அண்ணா அவர்களே. அவருடைய பிறந்த நாளில் என்னென்னவோ எழுத வேண்டும் என்று தோன்றுகிறது. அதிகமாக எழுதிப் பழக்கப்பட்டவனல்ல. நமது வளர்ச்சி தடை படுமோ, என நினைக்கும் பொழுது ஏற்படும் எண்ணத்தை கீழே தருகிறேனே தவிர யாரையும் குறை சொல்வதற்கல்ல.

இந்த நேரத்தில், ஒற்றுமையாக கட்டுப்பாடான முறையிலே நாம் நடந்து வருகிறோம் என்பதை அண்ணா அவர்களுக்குக் காட்டினால் தான் அவர் மனம் மகிழும். நமக்குள் இருக்கும் ஒற்றுமையை இப் பொழுது இருப்பதை விட இன்னும் அதிகமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நடிப்பிசைப்புலவர்

இப்பொழுது நம்மிடம் சில சல சலப்புகளும் வெறுப்பு விருப்புகளும் தோன்றி இருப்பது போல சில பத்திரிகைகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த போல இருக்கிறது என்ற சொல் இருக்கிறதே அது மிகவும் ஆபத்தான சொல். அந்த சொல் நமது கட்சிக்குள் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீயா? நானா? என்ற எண்ணம் எழுவதற்கு ஏற்ற நேரம் இதுவல்ல. கழகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடம் உண்டு. அந்தந்த இடத்தில் நின்று நாம் பணியாற்ற வேண்டும். அதை விடுத்து, அந்த இடத்திற்கு நான் வர வேண்டும். இந்த இடத்திற்கு நீ வர வேண்டும் என நினைத்து சிந்தனையை வேறு பக்கம் செலுத்தினால் அது தவருன வழியிலே கொண்டு போய் விட்டு விடும். கழகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடம் உண்டு என்பதை மக்கள் மனதில் நன்றாக பதியவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குத் தாவவேண்டும் என நினைத்தால் நாம் நினைத்த இடத்திற்குப் போய்ச் சேர முடியாது. கடைசியில் கீழே வீழ்ந்து விடுவோம். உழைக்கின்ற உழைப்பும் காலமும் கனிந்தால்தான் நாம் நினைக்கின்ற இடத்தில் போய் நிற்க முடியும் என்பது நான் கண்ட அனுபவ உண்மை.

ஜனநாயக சோஷலிசம் என்று சொல்லிக்கொண்டு 18-ஆண்டுகளாக மக்களைப் படுகுழியில் தள்ளி வைத்திருக்கும் இந்த ஆட்சியை அகற்ற வேண்டுமானால் நம்மிடையே கட்டுப்பாடு மிக மிக அவசியம்.

காந்தியார் அவர்கள் சுதந்திரம் கிடைப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக, தான் நடத்தி வந்த ஹரிஜன பத்திரிகையிலே எழுதினார்கள் வேதனையுடன். தயவுசெய்து சுதந்திரம் கிடைத்த மறுநாளே காங்கிரஸ் கட்சியைக் கலைத்து விடுங்கள் என்று! செய்யவில்லை அவர்கள். அப்படிச் செய்யாததின் காரணம்? வேறு நல்லவர்கள் ஆட்சிக்கு வந்து நல்லது செய்துவிடக்கூடாதே என்று இன்றைய ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள் போலிருக்கிறது.

இவற்றையெல்லாம் போக்க நமக்குள் ஒற்றுமை மிகவும் அவசியம் என்பதையும் தனித்தனியே அறிக்கைகளோ பேச்சுக்கள் பேசுவதையோவிடுத்து, கட்சியை வளர்ப்பதிலே — நமக்குக் கிடைத்த மற்றொரு காந்தியாரான அறிஞர் அண்ணா அவர்களின் கையைப் பலப்படுத்துவதிலே நமது கவனத்தைச் செலுத்தவேண்டும். அதுவே நமது முன்னேற்றத்திற்கு நல்லவழி.


வாழ்க அண்ணா!



நானும் நீங்களும்!

1960ல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. 6 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகி எல்லோரும் பேசியாயிற்று. 9 மணிவரை அண்ணா வரவில்லை. கூட்டத்தினருக்கு ஒரே ஏக்கம். மழை கொட்டிக்கொண்டிருக்கிறது. 9-15க்கு அண்ணா வந்தார். அனைவருக்கும் ஒரே உற்சாகம். பேசத் துவங்கினார். ''காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டேன். அடாத மழை. பாதையோ சரியில்லை. என்னிடமிருக்கும் பண்டமோ (கார்) பழுதுபட்டது. மழையில் நீங்களெல்லாம் மண்டபத்திலிருந்து வெளியே போக முடியாமல் இருக்கிறீர்கள். நானோ வெளியிலிருந்து வரமுடியாத நிலையில் காலம் கடந்து வந்தேன்,'' என்றார். கூட்டத்தினருக்கு ஒரே உற்சாகம். காத்திருந்த காலத்தை நொடியில் மறந்து விட்டார்கள்.

முதல் சந்திப்பு




[illegible]


"என் இதயம் விசாலமானது அதில் எல்லோருக்கும் இடம் உண்டு" என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த இதயத்தில் இடம்பெற லட்சோப லட்சம் இதயங்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

'தம்பி' என அழைக்கும் அந்தத் தேமதுரத் தமிழோசை செவிகளிலே பாயும்போது இரத்தக் கலப்பிற்கும் அப்பாற்பட்ட ஓர் உறவு-உணர்வு அந்தப் பெருந்தகையோடு நம்மை இணைக்கிறது. அந்த இணைப்புத்தான் இன்று மாபெரும் சக்தியாக வளர்ந்து வேரோடி-கிளைபரப்பி வெற்றி நடைபோடுகிறது.

இந்த வெற்றிப் படையினரின் முன்னோடிகளில் பலர் அண்ணாவின் இதயத்தில் இடம்பெறுவதற்கு முன் அவர் பெருமைக்குரிய தம்பியராய் நடைபோடு முன்- அவரை முதன்முதலில் எங்கே எப்படிச் சந்தித்தார்கள் என்பதை இங்கே தொகுத்துத் தந்துள்ளோம்.



[illegible]



1943-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்...

நான் அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி 1937-ஆம் ஆண்டில்தான் கேள்விப்பட்டேன். 1937-ம் ஆண்டில் துறையூரில் நடந்த சுயமரியாதை மாநாட்டிற்குச் சென்று வந்த பட்டுக் கோட்டை நண்பர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேருரை ஆற்றிய அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவுத் திறனைப் பற்றிப் பலபடப் பாராட்டிக் கூறிக் கொண்டிருந்தனர். அவர்கள் வியந்து பாராட்டிக் கூறியதைக் கேட்கக் கேட்க அண்ணா அவர்களுடைய ஆற்றல் மீது ஒரு நம்பிக்கையும் அவரது அருமையான அழகு மொழிப் பேச்சைக் கேட்க வேண்டுமென்ற ஆவலும் எனக்கு ஏற்பட்டது.

1938-ல் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில்தான் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சை முதன் முறையாகச் செவியாரக் கேட்டேன். அன்றைய அவர்களது பேச்சு எனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த ஒரு பேச்சாகும்.

1943-ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற வந்திருந்தார்கள். அப்பொழுதுதான் அவர்களை நேரிடையாகக் கண்டு அளவளாவிப் பேசும் வாய்ப்புப் பெற்றேன். அண்ணா அவர்கள் அண்ணாமலை நகர் விருந்தினர் விடுதியில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்கள். நானும் மற்ற மாணவ நண்பர்களும் பல ஐயவினாக்களையும் அறியா வினாக்களையும் எழுப்பி அவற்றிற்கு அண்ணா அவர்களிடமிருந்து நல்ல விளக்கங்கள் பெற்றோம். திராவிட இயக்கத்தில் நானும் மற்றைய மாணவர்களும் நேரிடையாகப் பங்கு கொள்வதற்கு அந்த உரையாடல் பெரிதும் காரணமாக இருந்தது என்று சொல்லலாம்.

— நாவலர் நெடுஞ்செழியன்




அருகில் அழைத்து தட்டிக்கொடுத்து...

அறிஞர் அண்ணா அவர்களின் 'திராவிட நாடு' தொடக்க கால இதழில் என்னுடைய 'இளமைப் பலி' என்ற கட்டுரைவெளியாகியிருந்தது. அதனைக் கண்ணுற்ற அண்ணா அவர்கள்—திருவாரூர் பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்தபொழுது—நான் பெரிய ஆளாக இருப்பேன் என்று கருதி என்னை அழைத்துவர ஆள் அனுப்பியிருந்தார்கள். அப்பொழுது நான் உயர்நிலைப்பள்ளி மாணவன். என்னை அண்ணா அவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள். நான் பள்ளி மாணவன் என அறிந்ததும் அண்ணா அவர்கள் என்னை அருகில் அழைத்து, தட்டிக் கொடுத்து "கட்டுரைகள் எழுதுவதில் கவனம் செலுத்தாமல் நன்றாகப் படி" என்று அறிவுரை வழங்கினார். அப்பொழுதுதான் நான் அண்ணா அவர்களை முதன்முறையாகச் சந்தித்தேன்.


மு. கருணாநிதி

சிதம்பரத்தில் எங்கள் இல்லத்தில்...



என் தந்தை மு. கல்யாண சுந்தரம் அவர்கள் முற் போக்கு எண்ணம் உடையவர். பழமைப்பாசி கெட்டி யாகப் படர்ந்திருந்த அந்த நாளில் சிதம்பரத்தில் அறிவி யக்க சார்பாக நடைபெறும் பெரும்பாலான பொதுக் கூட்டங்கள் என் தந்தை ஏற்பாடாகவே இருக்கும். அப்படிப் பொதுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு — அறிஞர் அண்ணு அவர்கள் எங்கள் இல்லத்தில் தங்கி யிருந்த பொழுதுதான் முதன் முதலில் அவரைச் சந்திக் கும் வாய்ப்பினைப் பெற்றேன்.


- பேராசிரியர் க. அன்பழகன்



சுயமரியாதைச் சங்கத்தில்...

1936-ல் சென்னை தங்கசாலைத் தெருவிலிருந்த சுய மரியாதைச் சங்கத்திற்கு அண்ணு அவர்கள் வாரந் தோறும் வருவார்கள். அங்குதான் அண்ணு அவர்களை முதன் முதலில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

- என். வி. நடராசன்




இளம் உள்ளத்தில் ஆழமான முத்திரை

1943-ம் ஆண்டு அப்போது நான் அண்ணுமலைப் பல் கலைக் கழகத்தில் இன்டர்மீடியட் வகுப்பில் முதல் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். சிதம்பரம் நகரில் 'திராவிட நாடு' இதழ் வளர்ச்சி நிதிக்காக சந்திரோதயம் நாடகம் நடைபெற்றது. அது சம்பந்தமாக வந்திருந்த அண்ணு அவர்களை நானும் என்னுடைய கல்லூரி நண்பர்கள் இரு வரும் சந்தித்து அண்ணு அவர்களுடைய கருத்துக்கள் பற்றியும் கொள்கைகள் பற்றியும் வாதிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தச் சந்திப்பு என்னை மிகவும் கவர்ந்தது என்னுடைய இளம் உள்ளத்தில் ஒரு ஆழமான முத்திரை யைப் பதிப்பித்தது.

அதனைத் தொடர்ந்து 1944-ம் ஆண்டு கும்பகோணம் நகரில் தமிழ் நாடு திராவிட மாணவர் மாநாடு நடைபெற் றது. அந்த மாநாட்டின்போது அண்ணு அவர்கள் ஆற்றிய மகத்தான உரையும்--அவருடன் கலந்து பழகிய சில மணித்துளிகளும் என்னுடைய வாழ்க்கைப் பாதையையே மாற்றி அமைத்துவிட்டது. கும்பகோணம் மாநாட்டில் நான் ஆற்றிய சொற்பொழிவை 'திராவிட நாடு' இதழுக்கு எழுதி அனுப்புமாறு அண்ணு கடிதம் எழுதியிருந்தார்! அந்த மாநாட்டிற்கு அடுத்து என்னுடைய சொற்பொழி வையும்--என்னையும் அறிமுகப்படுத்தி 'திராவிட நாடு' இதழ் வெளிவந்தது. என் முதல் சந்திப்பே நன்கு அறி முகமாகும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தது.

கே.ஏ. மதியழகன்



1938 ஆம் ஆண்டு
சென்னையில்...


1938–ல் சென்னையில் அண்ணா அவர்களின் உறவினர் ஒருவர் வீட்டில் எதிர்பாராதவிதமாகச் சந்தித்தேன்.

– சி. பி. சிற்றரசு

'மன்றம்'
அலுவலகத்தில்...

52 தேர்தலுக்குப் பிறகு அண்ணா அவர்களை 'மன்றம்' அலுவலகத்தில் சந்தித்தேன். நாவலர் நெடுஞ்செழியன் அறிமுகப் படுத்தி வைத்தார். நான் சட்ட மன்ற உறுப்பினரானதை அண்ணா பாராட்டினார். பல ஆலோசனைகளும் வழங்கினர்.

– ஏ. கோவிந்தசாமி





1943 ஆம் ஆண்டு
கோகலே ஹாலில்...

1943-ல் கோகலே ஹாலில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்தான் அறிஞர் அண்ணா அவர்களிடம் அறிமுகமாகும் வாய்ப்பினையும் முதன் முதலாக உரையாடும் சந்தர்ப்பத்தையும் பெற்றேன்.

– சத்தியவாணிமுத்து

நாகர்கோயிலில்
ஒரு மாநாட்டில்...

1948-ல் நாகர் கோயிலில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் சந்தித்தேன். அப்பொழுது நான் பள்ளி இறுதி வகுப்பு மாணவன்.

– கி. மஞ்சுகரன் எம். பி.



செலத்தில் பொதுக்கூட்டத்தில்...



1938-ல் சென்னையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது—நான் சேலத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடத்தினேன். சொற்பொழிவாற்ற அறிஞர் அண்ணா வந்திருந்தார் அங்குதான் அவரை முதன் முதலாகச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

– க. ராஜாராம்

போளூரார் தங்கை திருமணத்தின் போது...



1947-ல் போளூர் சுப்பிர மணியம் தங்கை திருமண வீட்டில் சந்தித்தேன். சந்திப்பதற்கு முன்பே அறிஞர் அண்ணா அவர்களிடம் பற்றும் பாசமும் வைத்திருந்த நான் அன்று முதல் அவர் அன்பு மிகுந்த தம்பிகளில் ஒருவனாக இருந்து வருவதில் பெருமை கொள்கிறேன்.

– ப. உ. சண்முகம் எம்.எல். ஏ.

---


26 ஆண்டுகளுக்கு முன்பு திருத்துறைப்பூண்டியில்...



அறிஞர் அண்ணா அவர்கள் 26 ஆண்டுகளுக்கு முன்பு திருத்துறைப்பூண்டியில். பன்னீர்ச் செல்வம் நினைவு நாளை யொட்டிப் பேசவந்தபோது மேடையில் பார்த்தேன், அப்போது நான் காங்கிரஸ்! இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு திருவாரூரில் ஒரு கூட்டத்தில் பேசி முடித்துவிட்டு மு. கருணாநிதி அவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது அருகில் இருந்து பார்த்தேன்.

– இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ.


1938 ஆம் ஆண்டு நாகையில்...




1939–ல் நாகையில் முஸ்லிம்லீக் அரசியல் மாநாட்டில் அறிஞர் அண்ணா கலந்து கொண்டார். அண்ணா அவர்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆர்வத்தில் மாநாட்டிற்கு முதல் நாள் இரவே சாப்பாடுகூட இல்லாமல் அங்கு தங்கியிருந்து மறுநாள் காலை அண்ணா வந்த வுடனேயே அறிமுகத்தோடு சந்தித்தேன். அங்குதான் அண்ணா அவர்களின் பேச்சையும் முதன் முதலாகக் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

– அப்துல்சமத்

(64-ம் பக்கம் பார்க்க)







C. N. Annadurai

முதல் பக்கம் :


○அண்ணவுக்கு சென்டிரல் ரயிலடியில்வரவேற்பு—
○பொதுக் கூட்டத்தில்ஒரு பகுதி—
○வீட்டில் அண்ணு—


2–ம் பக்கம் :

○ஊர்வலத்தில் ஒருபகுதி—
○அண்ணு முரசொலிபடிக் கிறார்—
○கழகத்தோழர் திரு மணத்தைநடத்திவக்கிறார்–
○நண்பருடன் அளவளாவு கிறார்.

'இல்லஸ் டிரேடட் வீக்லி'யில் வெளி வந்த படங்கள்.









Photographs by

R. KRISHNAN

(More Pictures Overleaf)







THE D.M.K. LEADER is given a rousing reception at Central Station, Madras, on his return from Malaysia.

C. N. Annadurai

(CONTINUED)

LISTENING ENRAPTURED to their leader, in Madras.





AT HOME he dresses and receives visitors in simple South Indian style.






AFTER HIS MALAYSIAN VISIT. C. N. Annadurai is taken in a mammoth procession in a horse-drawn chariot




SOLEMNISING THE MARRIAGE of one of his followers who dispense with religious ceremonies. Below: Relaxing at home.



GOING THROUGH "MURASOLI", the D.M.K. Party paper, at his Madras residence





பிறந்தார் அண்ணன்

வில்லவன்கோதை

எழுச்சி நடை — உணர்ச்சி பொங்கும் கருத்து நிறை கவிதை கீழே:

ஏற்றத் தாழ்வெனும் இருட்டை எரிக்கும்
இன்பச் சாசனம் எழுந்து நடந்தது!
காலத் தாயின் கருப்பையி னின்றெழு
கதிர்புத் துதயமாய், காஞ்சியங் கனவாய்,
அண்ணன் பிறந்தார்! அண்ணன் பிறந்தார்!
அண்ணனு பிறந்தார்? அதுதான் இல்லே!
தென்னகத் திருப்பம்! தென்றிசைக் கீதம்!
திராவிட துந்துபி! தென்புல பேரிகை!
புதிய சரித்திரம்! புறநானூறு!
சதிவடக் கெதிர்க்கும் தமிழக ஒளிவாள்!
கால பூமியின் கலங்கரை விளக்கம்!
காவிய நாடதன் கடல்மடைப் பெருக்கம்!
ஊழிற் பெருவலி! உயர்ந்த போர்க்கொடி!
ஆழியி னுழ்ந்த அறிவுல கரசு!
கொடுமை எதிர்த்துக் குமுறு மெரிமலே!
அடிமை முறிக்க ஆர்த்திடு சிறுத்தை!
தனியொரு தலைமுறை! சமத்துவச் சங்கொலி!
சதியிருள் அகற்றிச் சமைவிடி பொழுது!
காதற் கலித்தொகை! கனன்றெழு வெங்களம்!
கவினுர் தென்னர் கரத்துறை மறவேல்!

தாய்த்திரு நாட்டில் தவழ்தலே வாசல்!
பேய்த்தலே தகர்க்கப் பிறந்தபீ ரங்கி!
வடபுல வெறிக்கு மாப்பெரு சாட்டை!
வானக விரிவுநேர் மாப்புக ழேறு!
இவைகளே பிறந்தன! இவைகளே பிறந்தன!
இவைகள் பிறந்ததால் இனம்விழித் தெழுந்தது!
தெற்குக் காற்றே! திராவிடர் கீதமே!
கொற்கைநன் முத்தே! கொள்கைக் கோட்டமே!
திங்களே! தென்றலே! தேன்தரு சுவையே!
கங்குலைக் கிழித்தெழும் கருணையங் கதிரே!
கொக்கரித் திந்தி கொணர்வோர் நினைவை
கொதித்து அழிக்கும் கூர்கொடு வாளே!
நூறுநூ றுண்டு நோற்ற தவத்தின்
பேருய் நாட்டிற் பிறந்த தலைவனே!
எங்களின் வாழ்வே! எங்களின் வளமே!
எங்களின் உயிரதில் எரிசுடர் விளக்கே!
பட்ட மரத்திலும் பனிமலர் பூக்கப்
பாடும் காலப் பறவையே! அண்ணனே!
நாடு வாழ்ந்திட, நல்லவர் வாழ்ந்திட
நீடுநீ வாழ்க! நீடுநீ வாழ்க!!

புரந்தார்நாள் வளர்க!



கவிஞர் ஆனந்தம்

ஓ என் தமிழ்மகனே, ஒன்றுக்கும் அஞ்சாதே!
நீ, உன் பகுத்தறிவை நேர்மையாய்க் கையாண்டால்
ஈரா யிரமாண்டாய் எய்தாப் பெரும்புகழும்,
சீரார்ந்த நல்வாழ்வும் சேர, வழிசொல்வேன்!
ஆட்பட்டு நொந்தவர் ஆட்சிக்கு வந்ததனால்
நாட்பட்ட தீமை நலியுமென் றெண்ணினை!
மக்களாட்சி இங்கு மலர்ந்ததாய் நம்பினை!
தம்கட்சிக் காகவே, தம்கட்சிக் காரரால்,
தம்கட்சி யேஆளத், தந்நலக் காரர்தம்
சூழ்ச்சி கவர்ச்சி சுதந்திரம்! வெள்ளையரின்
வீழ்ச்சி! சமதர்மம்! யாவும் வெளிவேடம்!
கோழையர்; செல்வரைக் கும்பிடும் மோழையர்;
ஏழையை வாழ்விப்போம் என்பதோ ஏமாற்று!
தாய்மொழி தாழவும், தம்பதவி நீளவும்,
பேய்மொழி இந்தியைப் பேணிடும் பேதையர்!
என்றும் இவர் நம்மை எத்திப் பிழைப்போரே!
இன்றே இதை நன்ருய் ஏந்திக்கொள் நெஞ்சிலே!
வாக்குச்சீட் டென்னும் வுலியுள்ள ஆயுதத்தைத்
தூக்கி; இவர் தந்த தொல்லைகளைச் சிந்தித்துச்;
சட்டத்தைத் தீட்டுகின்ற சங்கடம் தாராமல்;
திட்டத்தைப் பாழாக்கும் செங்கோலை வாங்கிவிடு!
வான்கோழிக் கூட்டத்தில் வண்ண மயில்போலத்—
தான்கொண்ட கொள்கை தனிக்கொள்கை
யாய்விளங்கப்—
பல்லா யிரந்தோழர் பாங்குடன் பின்தொடர—
நல்ல நெறிகாட்டி-நாட்டின் தரமுயர்த்திப்—


போலித் தலைவராய்ப் புன்மைவழி தேடாமல்—
கூலிப் பட்டாளத்தின் கோணல்வழி நாடாமல்—
செந்தமிழ்ப் பண்பாடத் தேசங்கள் சுற்றிவந்து—
விந்தை அறிஞரெனக் கண்டோர் வியந்துரைக்க—
இந்திய பூபாகம் எங்குமுள்ள பாமரர்
சிந்தை நிறைந்திட்ட சீர்த்தலைவர் நம் அண்ணன்!
வெற்றிவா கைசூடி, வேண்டுமதி காரத்தைப்
பெற்று, நம் தாயகத்தைப் பீடு பெறவைக்க,
வாய்ப்பினைத் தேடு! வரும்பொதுத் தேர்தலில்
மாய்ப்போம் பழைமையை; வஞ்சினங் கூறிவிடு!
விண்ணிலே ஏராளம் வெள்ளிமீன் வாழ்ந்தாலும்...
தண்ணிலா போலத் தருமோநல் இன்பவொளி?
கண்கவர் பூக்கள் கணக்கின்றிப் பூத்தாலும்
வண்ணச்செந் தாமரைப்போல் வாசம் மணக்குமோ?
எத்தனை யோகட்சி எத்தனை யோதலைவர்
நித்தநித்தம் தோன்றி நிலையா தழிகையில்...
போட்டிகளை வென்று புதுமைக் கடைக்காலில்
கோட்டையொன்று கட்டிக் குடிவைத்த மன்னவன்!
வில்லினின்று பாய்கின்ற வெங்கணை மாரிபோல்
சொல்லுதிர்க்கும் வல்லவன், சோர்விலன்,
அஞ்சாதான்!
மாற்றோர் நம் மண்ணை வளைத்திட வந்திட்டால்,
சீற்றங்கொள் வேங்கையாய்ச் சீறித் துரத்திடவே...
தொல்லைகளை ஏற்றும், சுயவாழ்வைப் பாதித்தும்,
இல்லையிவர்க் கீடென்று யாவருங் கொண்டாடும்
தன்னலங் கொன்ற தலைமைத் தமிழ்மைந்தன்!
பின்வரத் தம்பியரைப் பெற்றும் பொலிவோனும்!
தென்னவரின் எண்ணத்தை உண்மையாய்க்
கண்ணுற்றுப்,
பொன்னன வாழ்வாக்கத் திண்மையுடை
கண்ணியன்!
அண்ணன் பிறந்தநாள் இன்னும் பலவளரக்
கண்ணின் கருமணிபோற் காப்போம்; நமக்காக
என்றுமவர் வாழ்க இனிது!

ஜனநாயகம் தான் மிக உயர்ந்த தத்துவம். அதனால் தான் சர்வாதிகாரியான அயூப்கான் கூட தனது அமைப்பு முறைக்கு அடிப்படை ஜனநாயகம் என்று பெயரிட்டு ஏமாற்றப் பார்க்கிறார்.

—அறிஞர் அண்ணா



தென்னாட்டுக் காந்தி (யார்)?



சீனிவாச மூர்த்தி

டானிலா டோல்சி என்பது அவருடைய பெயர். தடித்த உருவம். வழுக்கை விழுந்த தலை. தங்கநிற பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி. வெள்ளை நிறத்தில் ஐரோப்பிய உடை அணிந்திருந்தார். தாய் மொழியான இத்தாலி மொழியைத் தவிர வேறு மொழியே அவருக்குத் தெரியாது.

"இவர் தான் சிசிலி காந்தி" என்று அறிமுகப் படுத்தினர்கள். ஆங்கிலமும் இத்தாலி மொழியும் தெரிந்த ஜெர்மானிய இளைஞர் ஒருவரின் துணையுடன் அந்த சிசிலி காந்தியுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன் திண்டுக்கல் அருகில் உள்ள காந்தி கிராமம் என்ற ஊரில் யுத்த மறுப்பாளர்களின் உலக மாநாடு ஒன்று நடந்தது. அம் மாநாட்டிற்கு உலகெங்கிலுமிருந்து 'அகிம்சா வீரர்கள்' பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் இத்தாலி காந்தி என்றும் ஐரோப்பிய காந்தி என்றும் அழைக்கப்படுகிற டானிலா டோல்சி.

அப்போது என் மனதில் ஒரு கேள்வி எழுந்தது! ஐரோப்பிய மண்ணில் பிறந்த இப்படிப்பட்ட ஒருவரை எப்படி காந்தி என்று பெயரிட்டு அழைப்பது?

இந்த ஒப்புவமை நியாயமாகுமா? பொருந்துமா? அறிவாளர் உலகம் இதை எப்படி ஏற்றுக்கொள்ளும்?

x x

நமது நாட்டைப் போலவே— இத்தாலியிலும் தெற்கு தேய்ந்து வரும் பகுதி. அங்கே சிசிலி ஒரு தீவு — பஞ்சமும் நோயும் மக்களை வாட்டி வதைத்து வந்தன. இந்த கேடுகளைக் களைய அரசாங்கம் ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

டோல்சியால் இந்த கொடுமையைச் சகிக்க இயலவில்லை. எப்படியாவது ஏழை மக்களுக்கு வாழ்வு தர உறுதி பூண்டார் அவர். மக்களை ஒன்று திரட்டினர். சாலை அமைப்பது போன்ற சமுதாய பணிகளை நிறைவேற்றினர். அரைவயிறு உணவாவது கிடைக்க வழி செய்தார். இந்த முயற்சிகளைக் கண்ட அரசாங்கம் ஆதரவளிப்பதற்குப் பதிலாக ஆத்திரமடைந்தது.

டோல்சியைக் கைது செய்தார்கள். சிறையிலிட்டார்கள். ஏழை மக்களுக்கு தொண்டுபுரியும் குற்றத்திற்காக தண்டனை வழங்கினர்கள். அரசாங்க அனுமதி பெருமல் சாலை அமைத்ததும் புறம்போக்கு தரிசு நிலத்தில் உழுவடை செய்ததும் குற்றம் என்று கூறினர்கள்.

டோல்சி கைதானர் என்பதும், தங்களுக்காக அவர் சிறையில் வாடுகிறார் என்பதும் இத்தாலியில் மட்டுமின்றி அகில ஐரோப்பாவிலும் பரவியது. அவரது விடுதலைகோரி மாபெரும் இயக்கம் எழுந்தது. சிறையில் சிசிலி காந்தி உண்ணாவிரதமிருந்தார். ஆட்சி பணிந்தது.

மக்களுடைய வாழ்வுக்கு ஒரு திட்டம் உருவாகியது. அதனை அரசாங்கம் ஏற்றது. டோல்சி விடுதலையானர். பெரிய அளவில் நிர்மாண வேலைகள் துவங்கின.

இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் டோல்சி நிதி என்ற பெயரில் ஏராள

மான் பணம் வசூல் ஆகி யது. அந்த நிதியைக் கொண்டு சுய தேவைப் பூர்த்தி அடிப்படையில் அங் கங்கே கிராம யூனிட்டுகள் உ ரு வ ா கி வருகின்றன சிசிலியில்.

இந்த சாதனையில் என்ன இருக்கிறது?

சமூகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அகிம்சை வழி– ஒத்துழையாமை வழிதான் சிறந்தது என்று டோல்சி நம்பினார். நம்பியது மட்டு மல்ல அதைச் செயலிலும் காட்டினார். அந்தப் பணி யில் தன்னையே இன்னல் க ளு க்கு ஆட்படுத்திக் கொண்டார்.

அவர் நினைத்திருந்தால் சிசிலித் தீவையும்–இத்தாலி நாட்டையும் ப ய ங் க ர க் குழப்பத்தில் ஆழ்த்தி வைத் திருக்க இயலும். கம்யூ னிசப் பிரசாரத்திற்கு நிலைக் களனாக விளங்கி வரும் நாடுகளில் இத்தாலியும் ஒன்று. அங்கே பலாத் காரத்தைச் செயலில் நடத்து வது சிரமமான காரியம் அல்ல.

டோல்சி அந்த வழியை வெறுத்தார். இ ய ல ா து என்பதால் அல்ல; தவறு என்பதால்தான். வன்முறை யும் அதற்கான வாய்ப்பு களும் இயற்கையாகப் பெற் றிருக்கும் பகுதியில் அறவழி அன்பு வழியில் முயற்சி செய்யும் பெரியாரை காந்தி என்று அழைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

x x

இயல்பாகவே முரட்டுத் தனத்துக்கு பெயர்போனவர் கள் நீக்ரோக்கள். சமூகத் தில் ஆண்டாண்டுக் கால மாக அடக்கப்பட்டு வந்த தால் ஏற்பட்ட அவமானம் வெறியாக மாறி இருந்தது. அமெரிக்க நீக்ரோக்களுக் குக் குடி உரிமைகளும் சமத்துவமும் கிடைக்க அம் ம க் க ள ின் பலாத்காரப் போக்கே ஒரு தடையாக இருந்தது.

இந்நிலையில் அங்கே ஒரு பாதிரி — 28 வயதுகூட நிரம்பாதவர்–நீக்ரோ இனத் தவர் தோன்றினார். ஏசு நாதரின் பைபிள் முதல் ஹெகல் எழுதியது வரை எல்லாத் தத்துவ ஞானி களின் நூல்களையும் கரைத் துக் குடித்தார்.

'தீமையை எ தி ர் க்க வேண்டும்' என்பதும் 'நிற வெறி ஒரு தீமை' என்பதும் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. ஆனால் வழி?

காந்தியடிகளின் நூல் களில் அந்த வழியைக் க ண் ட ா ர். தீமையை எதிர்ப்பது அவசியம் என் பதைப் போலவே தீமையை அறவழியில் எ தி ர் ப்பது என்பதும் அவசியம் என உணர்ந்தார்.

வெள்ளை நிற மக்களின் மீது கறுப்பு நிற நீக்ரோக் கள் கொண்டிருந்த விரோத உணர்ச்சியை மாற்றினார். நீக்ரோ மக்களின் குடி உரிமை சாசனம் சட்டமாக நிறைவேறும் அளவு நிற வெறிக் கொடுமைக்கு சமாதி கட்டினார். 14 முறை சிறை புகுந்தார். மூன்று முறை உயிருக்கே தீங்கு நேரும் அளவு தாக்கப்பட்டார்.

ஓ. எம். சுப்பிரமணியன்

ஆனால் அமெரிக்க நீக் ரோக்கள் த ங் க ளு க் கு இழைக்கப்படும் கொடுமை களை உறுதியோடு ஆனால் அன்போடு –துணிவோடு– ஏற்றுக் கொள்ளும் மனவலி மையை ஏற்படுத்தினார். அகிம்சைவழி, வீ ர னின் ஆயுதம் என்பதை நிலை நிறுத்தினார்.

நீக்ரோ இனத்தவர் மட்டு மின்றி சமூகநீதியை ஏற்கும் ப ல் ல ா யி ர க் கணக்கான அமெரிக்கரும்–ஏன் உலக மே–மா ர் டி ன் லூ தர் கி ங்

*********o*********

என்ன பேசுவது?

1957-ல் தஞ்சையில் அஞ் சல் துறை ஊழியர் மாநா டொன்று நடந்துகொண்டி ருந்தது. அதில் அ றி ஞ ர் அண்ணா அவர்களின் சிறப் புச் சொற்பொழிவும் ஏற் பாடாகியிருந்தது. அண்ணா அவர்கள் வேறொரு ஊர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தாமதமாக வ ந் தா ர் கள். அடுத்து அ வ ர் கள் பேச வேண்டியிருந்தது. மாநாட்டு அமைப்பாளரை அழைத்து நான் எ ன் ன பே சு வ து என்று கேட்டார்கள். அவர் மாநாட்டுத் தலைவரின் உரை அ ச் சி ட் ட தாளொன்றை அளித்தார். ஒரு கண்ணோட் டம் விடுவதற்குள், பேச அழைக்கப்பட்டார்கள். அவ் வளவுதான் - அடுத்த ஒரு மணி நேரமும் அஞ்சல் ஊழி யர்களின் பி ர ச் சி னை க ளை அலசி ஆராய்ந்து அருமை யானதொரு சொற்பொழிவு நி க ழ் த் தி னர் கள். கூடி யிருந்த மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர்.

*********o*********

என்ற அந்த 35 வயது பாதிரியாரை அமெரிக்க காந்தி என்று கொண்டாடுகிறது.

ஆப்பிரிக்காக் கண்டத்து காம்பியா நாட்டின் தலைவர் கென்னத் கவுண்டா, இது போலவே ஆப்பிரிக்க மண்ணில் காந்தியடிகளின் அற வழிக்கு வெற்றிதேடித் தந்தவர். இன்று காம்பியா சுதந்திரநாடு. அதன் ஜனாதிபதி கென்னத் கவுண்டா தான்.

கடமையுணர்வு

திராவிடர் கழகமாக நாம் இயங்கிய நேரம். அறிஞர் அண்ணா அவர்கள் பாத்திரமேற்று நடிக்கும் நாடகம் ஒன்று கழக மாநாட்டில் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த வேளையில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு உடல் நலம் கெட்டுவிட்டது. நடக்க முடியாத நிலை.

ஆயினும், நாடகம் நடைபெற்றாக வேண்டும் - என்று பெரியார் கண்டிப்பாகக் கூறி விட்டார். பெரியார் வார்த்தையைத் தட்ட முடியாத அண்ணா அவர்கள் காகபட்டர் வேடம் தாங்கி-கட்டிலில் அமர்ந்தபடியே நடித்தார். அண்ணாவின் கடமை உணர்வு கண்டு தோழர்கள் மெய்சிலிர்த்தனர்.

இலங்கையில் சிங்களப் பெரும் பான்மையினரின் அடக்கு முறைக்கு ஆளாகி நின்ற தமிழ்பேசும் மக்களை, அன்பு வழியில் ஒன்று திரட்டியவர் செல்வ நாயகம். பிரிட்டிஷ் அரசாட்சியில் நீதிபதியாக இருந்தவர். 'க்வீன்ஸ் கான்சல்' என்னும் சட்ட கௌரவம் பெற்றவர். அதாவது இங்கிலாந்தின் உயர்ந்த நீதி மன்றமான 'பிரிவு கௌன்சிலில்' வக்கீலாகப் பதிவுசெய்து கொண்டவர். வேலையை உதறித்தள்ளி தமிழ் மக்களின் தலையாய இயக்கமாகிய இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமையினை ஏற்றார். கொலை, கொள்ளை தீ வைத்தல், கற்பழித்தல் போன்ற எத்தனையோ பயங்கரங்களுக்கு ஆளான ஈழத் தமிழர்களை காந்தி வழியில் நடத்திச் சென்றார். இன்று சிங்களவரும் தமிழரும் சம அடிப்படையில் சரியாசனம் பெற்று இலங்கை மந்திரி சபையில் ஒரு தமிழர் அமர்ந்துள்ளார். ஆட்சிப்பீடத்தில் சிங்களத்தோடு தமிழ் சம வாய்ப்பு பெற்றுள்ளது.

இந்த விந்தை புரிந்த மனிதரை ஈழத் தமிழ்மக்கள் மட்டுமின்றி சிங்களர் கூட ஈழத்துக்காந்தி என்று புகழ் கிறார்கள்.

x x

ஆட்டுப்பாலும் வேர்க் கடலையும் சாப்பிட்டு வாழ்க்கையின் தேவைகளைக் குறைத்து வாழ்பவன் 'துறவி'யாகலாமே தவிர 'காந்தி' ஆகிவிட முடியாது.

காந்தியடிகள் அவரது எளிமையினால் - உண்மைகளால் 'உலக உத்தமர்' ஆனார். ஆனால் அவரை உலகம் போற்றி வணங்குவது அதற்காக மட்டுமா?

அகிம்சை-அன்பு- ஆகிய நெறிகள் சத்தியம் என்கிற கோட்பாடு ஆகிய இவை, வெறும் தத்துவங்களாக இருந்தன. அவற்றைக் கையாண்டு அரசியலில் வெற்றியடைய முடியும் என்று நிரூபித்த ஒன்றில்தான் புத்தரையும், ஏசுவையும் காந்தியடிகள் வென்றுவிட்டார்.

யாரையேனும் காந்தி என அழைப்பதானால் இதனைத் தான் அளவாக்கிச் கொள்ளவேண்டும். ஒரு மனிதர் - ஒரு தலைவர் வன்முறையால் காரியத்தைச் சாதித்துகொள்ளும் வலிமை படைத்திருந்தும் கூட அந்த வழி தவருனது என்று வெறுத்து ஒதுக்கி தன்னையும் தன் கட்சியினரையும் வருத்தி - எதிரிக்கு சிறிது கூட சேதம் ஏற்படுத்தாமல்- யார் லட்சியப் பதையில் முன்னேறுகிறார்களோ அத்தகையவர்கள் 'காந்தி' என அழைக்கப்பட வேண்டியவர்கள்தான்.

எளிய வாழ்வும் தூய நோக்கமும் கொண்டிருந்தாலும் கூட இம்சை வழியில் பலாத்காரப் போக்கில் நாட்டம் கொண்டிருப்பதால் தான் வியட்னும் குடியரசுத் தலைவரான ஹோ-சி-மின் 'காந்தி' என்ற அடைமொழிக்கு தகுதியற்றவராகிறார்.

பாரதியார் கூறியபடி

'தன்னுயிர் போல தனக்கழி
வெண்ணும்
பிறனுயிர் தன்னையும்
கணித்தல்'

என்பதுதான் மெய்ஞ்ஞானம். இந்த "மெய்ஞ்ஞானத்துணிவினை மற்றுங்கிழிபடுபோர், கொலை, தண்டம் பின்னியே கிடக்கும் அரசியலதனிற் பிணைத்திடத் துணிந்தனை பெருமான்" என்று பாடுகிறார் பாரதியார் காந்தியடிகளைப் பற்றி.

இந்த மெய்ஞ்ஞானத் துணிவினை அரசியல் துறையில் பிணைப்பவர் யாராயினும் அவர் காந்தி என அழைக்கப்பட வேண்டியவர் தான்.

இது ஒரு ஊர்-ஒருநாடு என்று இல்லாமல் உலகம் முழுவதற்குமான அளவு கோல்.

அந்த வகையில் சமூக பொருளாதார அரசியல் பிரச்னைகளை அறவழியில் அன்புவழியில் காந்தி வழியில் தீர்க்கமுடியும் என்று கருதுவதோடு மட்டுமின்றி-அந்தவழியில் தனது நாட்டு மக்களை அழைத்துகொண்டு வரும் பெருந்தலைவர் அறிஞர் அண்ணை அவர்களும் யாருடைய ஒப்பமோ மறுப்போ தேவையில்லாத நிலையில் தானாகவே தென்னாட்டுக் காந்தியாக விடுகிறார். ★


கலையுள்ளம்!

நமது இயக்கத் தோழர்களுக்குக் கலைத் துறையில் ஆர்வம் உண்டாக்கவும், ஓவியங்களின் வாயிலாகப் பல வரலாற்று உண்மைகளையும், செய்திகளையும், புள்ளிவிவரங்களையும் அறிவிக்கவும் — ஓவியக் கண்காட்சிகளை மாநாடுகளின்போது நடத்த வேண்டும் என்பதில் அறிஞர் அண்ணை அவர்களுக்குப் பெரு விருப்பம் உண்டு.

1956-ல் திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டுக்கு முன்பு சுமார் ஒரு மாதமாக அங்கு அண்ணை அவர்கள் மேற்பார்வையில் பெரிய ஓவியக் கலைக்கூடமே உருவாகி வேலை நடந்து வந்தது.

அண்ணை அவர்களுக்குப் புதிதாக ஒரு திட்டம் தோன்றியது. மாநாட்டுத் திடலைச் சுற்றிலும் பனைமரத் தூண்டுகளை நட்டு வைத்து அவற்றைச் சுற்றி, சுவரெழுப்பியது போல, சணல் (கித்தான்) படுதாவைப் பொருத்திவிட்டால் அழகாக இருக்கும் என்பதே அது. இதற்காகப் பல நூறு அடி நீளமுள்ள படுதாக்கள் வாங்கப் பட்டன. பலவர்ண சாயங்களைச் சட்டிகளில் கரைத்து வைத்துக் கொண்டு தூரிகையில் தாறுமாறுகத் தெளித்துக் காட்டினார் அண்ணை. அதைப் பின்பற்றி அங்கிருந்த நண்பர்கள் அந்தப் பெரிய வேலையைச் செய்து முடித்தார்கள்.

ஆனால், பனைமரத் தூண்டுகள் மாநாடு துவங்கும் நேரம் வரை வந்து சேரவில்லை. அண்ணைவுக்கு இதனால் பெரிய மனக்குறை. இருந்தாலும் தாமதமாக வந்த மரத்துண்டுகளைக் கண்காட்சி காணச் செல்லும் பாதையின் இருபுறமும் நட்டு, அந்த வண்ணத் திரைச் சேலைகளை பொருத்திய பின்பே அண்ணைவுக்கு முழு மனநிறைவு ஏற்பட்டது.



மதுரை-2
1—9—1965

அன்புடையீர் !

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. அண்ணாத்துரை அவர்களின் 57-வது பிறந்த நாளை ஒட்டித் தங்கள் 'முரசொலி' ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சியுற்றேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றிய அரிய தொண்டுகளைப் பற்றிய கட்டுரைகள் சிறப்பு மலரை அலங்கரிக்குமென்று நம்புகிறேன். அவையே அவருக்கு மேலும் ஊக்கம் ஊட்டுவதாகவும் மக்களுக்கு நன்மை பயப்பன வாகவும் இருக்கும்.

நண்பர் அண்ணாத்துரை அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பொதுப் பணியில் சிறப்புடன் விளங்கவேண்டு மென்று வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,

பி. டி. ராஜன்




பாக்கிஸ்தானுக்கும் நமக்கும் நடக்கும் போர் ;
நம் மண்ணைக்காத்திட – மானத்தைக் காத்திட நடக்கும் போர் !

மலேயாவில் அண்ணா



சிங்கப்பூர் விமான நிலையத்திற்கு எதிரில்-செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் படையின் அணிவகுப்பு.



விமான நிலையத்தில் அண்ணா அவர்களுக்கு பல்வேறு சங்கங்கள் சார்பில் மாலை அணிவிக்கும் காட்சி.




சிங்கப்பூர் துறைமுகத்திலிருந்த கப்பலில் ஏறிய அறிஞர் அண்ணா அவர்கள் கப்பல் அதிகாரியிடம் விளக்கம் கேட்கும் காட்சி.



சிங்கை ஜாலன் புசார் ஸ்டேடியத்தில் வரவேற்பு. அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்) செழியன், கலாச்சார அமைச்சர் ராசரத்தினம், அறிஞர் அண்ணா, சிங்கைப் பிரதமர் லீ, இந்திய ஹைகமிஷனர் அப்ரஹாம்.



சிங்கப்பூர் துறைமுகத்தில் அறிஞர் அண்ணாவும் செழியனும்.



1. சிங்கப்பூர் தந்த வரவேற்பின் போது...சிங்கப்பூர் பிரதமர் லி-குவான்-யூ பேசுகிறார்.

2. மேடையில் அமைச்சர் திரு ராசரெத்தினம் அறிஞர் அண்ணு, செழியன்.


3. மலேசிய, சிங்கப்பூர், தி.மு.கழகக் கொடிகள் பின்னணியில் இருக்க, அண்ணு அமர்ந்திருக்கிறார்.




சிங்கப்பூர் பிரதமர் லீ யுடன்
உரையாடுகிறார் அண்ணா.

சிங்கப்பூர் தந்த வரவேற்பில்
ராசரெத்தினம், அண்ணா, செழியன்
ஆகியோர் பேசுகின்றனர்.






56, அமைப்புகள் அணிவித்த மாலையுடன் துணைவேந்தர் போ. தோழர் செழியன், அறிஞர் அண்ணு, ராசரெத்தினம்



பினாங்கு மேயர் அண்ணுவிடம் அறிமுகப்படுத்தப்படுகிறார்



சிறப்புக் கூட்டநிதியை சிங்கப்பூர் பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் அண்ணு தருகிறார்.



குயீன்டவுன் மாடிவீடுகளை அண்ணு பார்வையிடுகிறார்



பிஜுங்கு மாநகராட்சி வரவேற்பிற்கு பதிலுரைக்கிறார் அண்ணு.



ரப்போநகராட்சித் தலைவர் எஸ்.பி. சீனிவாசகம் நகரசபைக் கேடயம் தருகிறார் அண்ணுவுக்கு



பிஜுங்கு மாநகராட்சி வரவேற்பு வரவேற்பவர் மேயர் சி. ஓய். சாய்.



கினிபோர்ட் தொழுகத்தை சுற்றிப் பார்க்கிறார்



பிஜுங்கு பொதுக் கூட்டத்தில் அண்ணு அருகிலிருப்பவர் மேயர் சி. ஓய். சாய்.



பிஜுங்கு கொழுமலையில் அண்ணு.

காயிதே மில்லத் வாழ்த்து!

INDIAN POSTS AND TELEGRAPHS DEPARTMENT

TELEGRAM

077

077

Date Stamp

Time of { Booking / Receipt

From

By

Address

அண்ணலின் பிறந்த நாளன்று எனது இதயப்பூர்வமான வாழ்த்துகள். மக்களின் இதயத்தையும்- எண்ணத்தையும் ஆளும் தனித்தன்மை வாய்ந்த மாபெரும் தலைவர் அவர். அவருக்கு என் வாழ்த்துகள்


முகமது இஸ்மாயில்

The sequence of calls at the beginning of this telegram is no sign of telegram time handed in the intervals, it is only an number of words.

This form must accompany any enquiry

K.F. No.2 FP "O" Book/110/60/93 12-3-93—20,000 Rms.





1937–ஆம் ஆண்டு
மதுரை எட்வர்டு ஹாலில்...

1937-ல் தான் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டேன் அதையொட்டித்தான் அண்ணு அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக்கிட்டியது. மதுரை எட்வர்டு ஹாலில் திருச்சி திருமலைசாமி தலைமையில் மாநாடு நடந்தது. அண்ணு இந்த மாநாட்டுக்குப் பேச வருகிறார், மாணவராயிருந்தபோது தான் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறார் என்று சொன்னார்கள் நண்பர்கள். நானும் மாநாட்டுக்குப் போயிருந்தேன், மாநாட்டுக்கு ஒருவர் டிரங்க் பெட்டியோடு வந்தார், முதலில் நிர்வாகிகள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. பின்னரே அவர்தான் அண்ணு என்று எல்லோருக்கும் தெரிந்தது அங்குதான் அண்ணு அவர்களிடம் முதன் முதலில் பேசினேன்.

– மதுரை முத்து

காஞ்சியில்
சந்தித்தேன்...



கூட்டத்தில் பலமுறை பார்த்திருக்கிறேன் என்றாலும் காஞ்சிபுரத்தில் அவரும் அவரைச்சார்ந்த நூறு தோழர்களும் கைது செய்யப்பட்டு விடுதலையடைந்த போது தனியாகச் சந்தித்துப் பேசினேன் அதுதான் முதல் சந்திப்பு.

– அன்பில் தர்மலிங்கம் எம். எல். ஏ.



இன்னும் நினைவில்
நிற்கிறது...

1947–ல் சிவகெங்கைக்கு வந்திருந்தார். அங்குதான் அண்ணு அவர்களை முதலில் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன்பிறகு 'திராவிடன்' ஏட்டின் துணை ஆசிரியனைப் பணியாற்றும் போது நன்கு அறிமுகமாகும் வாய்ப்பினைப்பெற்றேன். நான் பேசிய முதற் கூட்டமே அண்ணு அவர்களுடன்தான். சென்னை மீர்சாகிப் பேட்டையில் நடைபெற்ற அந்தக் கூட்டம் இன்னும் என் நினைவில் நிற்கிறது, காரணம்—அந்தக் கன்னிப் பேச்சை அண்ணு அவர்கள் பாராட்டியதுதான்.

– எஸ். எஸ். தென்னரசு

பேச்சில் மயங்கி
என்னை மறந்தேன்!



அறிஞர் அண்ணுவை இயக்கத் தோழனைப்பார்க்கவில்லை. 1945-ம் ஆண்டு சென்னைக்கு ஒரு வேலையாக சென்று கொண்டிருந்தேன்; திண்டிவனத்தில் சிறிதுநேரம் தங்க வேண்டியிருந்தது; அப்போது அங்கு அறிஞர் அண்ணு அவர்கள் பேசுவதாக அறிந்தேன்; அக்கூட்டத்திற்குச் சென்று அவர் பேச்சைக் கேட்டேன்; பேச்சில் மயங்கிவிட்ட நான் சென்னைக்குப் போவதையே மறந்து விட்டேன்.

– இரா. சாம்பசிவம்